# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1680 - 2010 නොවැම්බර් මස 12 වැනි සිකුරාදා - 2010.11.12

*1680 ஆம் இலக்கம் – 2010 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 12 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி I : தொகுதி (IIஅ) – விளம்பரங்கள்

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)*


| | பக்கம் |
|---|---|
| பதவிகள் – வெற்றிடம் | 1714 |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 1719 |


***வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான***

***முக்கிய அறிவித்தல்கள்***

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தில், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் அறிவித்தல் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை - நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கான விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2010, நவெம்பர் மாதம் 19 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2010, நவெம்பர் மாதம் 04 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

**லக்ஷ்மன் குணவர்தன,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2010 ஆம் வருடம் சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிறபதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரச சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்கவேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுறத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத்தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரச சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரச சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரச சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த)தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அனாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரச சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்;ராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்;ராட்சிக் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரச சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரச சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரச சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

**5. யுத்த சேவைச் சலுகை :**

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

**6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரச சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரச சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவுசெய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமைபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந்திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந்திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந்திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளும் அறிவுறுத்தல்களும்

1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கத்தைக் கொண்ட பரீட்சைகள் செய்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கச் செயற்படுதற்கு பரீட்சார்த்திகள் அனைவரும் கடப்பாடுடையவர்களாவர்.

எல்லாப் பரீட்சார்த்திகளும் கீழ்வரும் விதிகளுக்கமைய நடந்துகொள்ள வேண்டும் விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சை ஆணையாளரின் விரகின்படி கீழ்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர்.

(i) முழுப்பரீட்சையிலிருந்து அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்திவைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் பகுதியிலிருந்தோ நிறுத்திவைக்கப்படுவர் ;

(ii) ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர் ;

(iii) ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்துவைக்கப்படுவர் ;

(iv) சீவியகாலம்வரை பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்து வைக்கப்படுவர் ;

(v) ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமல் தடுத்துவைக்கப் படுவர் ;

(vi) பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலிசாரிடம் பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விடயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்தல்.

பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும்பொழுதோ பரீட்சைக்குப் பின்னரோ தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சார்த்தி தீர்மானித்தால் அத்தீர்மானம் முடிவானதாகக் கொள்ளப்படும். எனினும், அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம் அரசாங்க சேவை அதிகார சபையால் பரிசீலனை செய்வதற்குட்பட்டதாகும்.

1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்திகளுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணாது நடந்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் போதும் வெளியேறும்போதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்துகொள்ளுதல் வேண்டும்.

2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும்பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவிசெய்தல் வேண்டும்.

3. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி நிலவச் செய்ய வேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றும் பரீட்சார்த்திகளுடனோ வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனோ தொடர்புவைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார். பரீட்சை உத்தியோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

4. மேற்பார்வையாளரால் ஒழுங்குசெய்யப்பட்ட மேசையைவிட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக்கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமும் செய்யக்கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்குசெய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்துகொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.

5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்பட மாட்டாது.

6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந்தாளையோ வெறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடை எழுதுந்தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ்விதிக்கு மாறாக நடந்துகொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.

7. வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரை மணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப்பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்பட மாட்டார் இந்த நேர எல்லை கழிந்த பின்னர் தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேறவும் அனுமதிக்கப்படுவர். செய்முறை அல்லது வாய்மொழிப் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.

8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணாக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்துகொண்டதாகக் கருதப்படுவர்.

9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப் புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலோ சேதப்படுத்தப்படவோ கூடாது. பருமட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள்களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியவற்றை ஒழுங்காகக் கீறிவிடவேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச்செல்லல் ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப்படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கு எத்தனமெனக் கருதப்படும்.

10. கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனோ செய்கை வழியில்லாமலோ சரியான விடைகள் இருந்தால் சித்திரத்தில் அலங்கார ரூபச் சித்திரமும், கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறுமொன்றினோடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.

11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்திலேனும் புத்தகம், சட்டைப்பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம் முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களைவிட வேறு தாள்களையோ வைத்திருக்கக் கூடாது. தேவைக்கு வேண்டிய மாதிரி வர்ணப்பெட்டியையோ, கணிதக் கருவிப்பெட்டியையோவிட கைப்பை, அழகு செய்செப்பு, பார்சல் முதலியவற்றையோ, கோவை அட்டை, கடதாசி மட்டை, வெற்றுக் கடதாசிக் கொப்பி, மடித்த புதினப்பத்திரிகை, மாட்டுத்தாள் முதலியவற்றையோ வைத்திருக்கக் கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்கு உள்ளாவார்கள்.

12. பரீட்சை மண்டபத்திலிருக்கும் பரீட்சார்த்தி தம்வசம் புத்தகங்களையோ குறிப்புக்களையோ வைத்திருக்கக் கூடாது. மேற்பார்வையாளருக்கு தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிட வேண்டும். இந்நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.

13. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக்கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவிசெய்யவும் அப்பரீட்சார்த்தியிடமிருந்தோ வேறொருவரிடமிருந்தோ உதவி பெறவுங்கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின்கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்குமேல் விடக்கூடாது.

14. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தைவிட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பத்திலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால் பரீட்சார்த்தி ஒரு கவனிப்பாளருடன் செல்லவிடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும்பொழுதும், மீண்டும் வரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.

15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப் பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.

16. பரீட்சார்த்தியல்லாத ஒருவர் பரீட்சார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.

பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி கீழ்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும் .

(i) ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்திலும் பார்க்க குறைந்தது 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன்நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.

(ii) ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப் பற்றியோ தோற்றுவதற்குரிய தகுதிகளைப் பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்குமுன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்திற்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப்படக்கூடும்.

(iii) நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்றுப்பத்திரங்கள் உம்மிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங்களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டு வருதல் வேண்டும். தேவையான உறுதிப்பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடில் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படும். உண்மை பற்றிய சான்றுப்பத்திரங்களைக் கொண்டுவர மறந்துபோனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.

(iv) சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத்தாள், கணனி ரேகைத்தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால் அதைப்பற்றி மேற்பார்வையாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றையும் உபயோகிக்கக் கூடாது. மேல் மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுக்கப்பட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.

(v) சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக் கருவிகள், பென்சில், அழிறப்பர்கள், நிறப் பென்சில்கள், வர்ணக்கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப் பிரதி செய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டுவருதல் வேண்டும்.

(vi) விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதுந்தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவுந்தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில் ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்பட வேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும். அல்லது சில வெற்றுக்கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.

(vii) உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப்பில் வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு, பரிசோதகரின் உபயோகத்துக்காக விடப்பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.

(viii) எல்லா விபரமாக கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளில் முறையான அமைப்பு முறையில் தருக. வரைபடங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைபடத்தை அல்லது கோட்டு ரூபத்தை அல்லது சிறுபடத்தைக் காட்டி எழுதப்படும் விடை, விடைத்தாளில் மறுபக்கத்தில் தொடரப்படுமானால் அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்பட வேண்டும்.

(ix) ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்றுசேர்த்து இடதுபக்கத்து மேல் மூலையில் (வலதுபக்க மேல் மூலையிலன்று) உமக்குக் கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.

(x) வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள் தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.

(xi) உமது விடைத்தாள்களைத நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணாமற் போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகரிடமோ பணியாளரிடமோ விடைத்தாள்களைக் கொடுத்தல் கூடாது.

(xii) மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெறவேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக்காட்ட வேண்டும்.

பரீட்சை ஆணையாளர் நாயகம்.

இலங்கை பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பதவிகள் - வெற்றிடம்

திருத்தம்

**பதிவாளர் நாயகம் திணைக்களம்**

விவாக, பிறப்பு, இறப்பு பதிவாளர் பதவி - கொழும்பு மாவட்டம்

*03.09.2010 ஆந் திகதிய 1670 ஆம் இலக்க வர்த்தமானியிற்குப் பதிலாக 2010.10.08 ஆந் திகதிய 1975 ஆம் இலக்க வர்த்தமானியில் திருத்தம் செய்யப்பட்ட பதவியில் கொழும்பு பிரிவில் இரத்மலானை பிரதேசத்தில் விவாக (பொது) பதிவாளர் என்பது கொழும்பு பிரிவில் (மேற்கு இரத்மலானை) விவாக (பொது) பதிவாளர் என மாத்திரம் மீண்டும் திருத்தம் திருத்தப்படுகின்றதென பணிவுடன் தெரிவிக்கின்றேன்.*

*2. இந்த விண்ணப்பத்திற்கமைய விண்ணப்பங்களை 13.12.2010 ஆந் திகதிக்கு அமைய விண்ணப்பங்களை அனுப்பி வைக்கவும்.*

*3. 2010.09.03 ஆந் திகதிய 1670 ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட மேற்சொல்லப்பட்ட பதவி தொடர்பான விண்ணப்பத்தில் ஏனைய விபரங்கள் உள்ளபடி நடைமுறையில் இருக்கும் என்பதையும் தயவாக கவனத்தில் கொள்ளவும்.*

*ஈ. எம். குணசேகர,*
*பதிவாளர் நாயகம்.*

*பதிவாளர் நாயகம் அலுவலகம்,*
*இல. 234/ஏ3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,*
*பத்தரமுல்லை,*
*2010, ஐப்பசி 21.*

*11-229*

திருத்தம்

**இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தின் அச்சக அத்தியட்சகர் பதவிக்கு ஆட்சேர்த்தல்**

*2010.10.29 ஆந் திகதி வெளியிடப்பட்ட வாராந்த வர்த்தமானியின் பகுதி I தொகுதி (IIஅ) இல் பிரசுரிக்கப்பட்ட இலக்கம் 10/983 கொண்ட மேல் குறிப்பிட்டுள்ள தலைப்பின் கீழ் இலக்கம் 04 இல் 'விண்ணப்பிக்கும் முறை' என்பதன் கீழ் உப இலக்கம் (vi) இல் குறிப்பிட்டுள்ள வாக்கியம் பின்வருமாறு திருத்தப்பட வேண்டும்:-*

(vi) *இந்த அறிவித்தலில் உள்ளடக்கப்படாத எவையேனும் விடயங்கள் இருப்பின் அவை பற்றித் தீர்மானிக்கும் அதிகாரம் கல்வி அமைச்சின் செயலாளருக்கு உரியதாகும்.*

*கல்வி அமைச்சு செயலாளரின் கட்டளையின் பிரகாரம்,*

*பரீட்சைகள் ஆணையாளர் நாயகம்.*

*பரீட்சை ஆணையாளர் நாயகம்,*
*இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்,*
*பெலவத்த,*
*பத்தரமுல்லை.*
*03.11.2010.*

*11-525*

---

**பதிவாளர் நாயகம் திணைக்களம்**

முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவி - கண்டி மாவட்டம்

*இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள முஸ்லிம் விவாக பதிவாளர் பதவிகளுக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன :-*

*2. விண்ணப்பதாரர்கள் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவுசெய்கின்ற பிரிவுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும் குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளர்களாகவும் பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.*

*3. இப்பதவிக்காக ஆண் பாலாருக்கு விண்ணப்பிக்க முடியும்.*

*4. விண்ணப்பதாரரின் வயது 21 வருடங்களுக்கு குறையாமல் இருப்பதோடு, 65 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.*

*5. விண்ணப்பதாரர்கள் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.*

*6. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமான மேலதிக விபரங்கள் உரிய மாவட்ட செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து தெரிந்துகொள்ளலாம்.*

*7. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்ட செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் மற்றும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.*

*8. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவங்களை 2010, மார்கழி மாதம் 13 ஆந் திகதியோ அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.*

*ஈ. எம். குணசேகர,*
*பதிவாளர் நாயகம்.*

*பதிவாளர் நாயகம் அலுவலகம்,*
*இல. 234/ஏ3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,*
*பத்தரமுல்லை,*
*2010, ஐப்பசி 26.*

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பங்கள் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| கண்டி | ஹரிஸ்பத்துவ | ஹரிஸ்பத்துவ பிரிவில் உக்குரஸ்சபிற்றிய பகுதியில் முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவி | மாவட்ட செயலாளர்/மேலதிக பதிவாளர் நாயகம் - மாவட்டச் செயலாளர் அலுவலகம், கண்டி |

11-286

---

**பதிவாளர் நாயகம் திணைக்களம்**

முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவி - கண்டி மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள முஸ்லிம் விவாக பதிவாளர் பதவிகளுக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன :-

2. விண்ணப்பதாரர்கள் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவுசெய்கின்ற பிரிவுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும் குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளர்களாகவும் பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

3. இப்பதவிக்காக ஆண் பாலாருக்கு விண்ணப்பிக்க முடியும்.

4. விண்ணப்பதாரரின் வயது 21 வருடங்களுக்கு குறையாமல் இருப்பதோடு, 65 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

5. விண்ணப்பதாரர்கள் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

6. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமான மேலதிக விபரங்கள் உரிய மாவட்ட செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து தெரிந்துகொள்ளலாம்.

7. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்ட செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் மற்றும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

8. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவங்களை 2010, மார்கழி மாதம் 13 ஆந் திகதியோ அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் அலுவலகம்,
இல. 234/ஏ3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2010, ஐப்பசி 26.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பங்கள் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| கண்டி | அக்குரண | ஹரிஸ்பத்துவ ரம்புகே எல பிரிவில் முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவி | மாவட்ட செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலாளர் அலுவலகம், கண்டி. |
| கண்டி | அக்குரண | மல்வாகின்னகம பகுதியில் ஹரிஸ்பத்துவ பிரிவில் முஸ்லிம் விவாகப் பதிவாளர் பதவி | மாவட்ட செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலாளர் அலுவலகம், கண்டி. |

11-288

## இலங்கை வான்படை

*அரசாணையமர்வுஅலுவலர் வெற்றிடங்கள்*

இலங்கை நிரந்தர/தொண்டர் வான்படையில் பரிபாலன நீதிப்பிரிவில் ஆண்/ பெண் நேரடி அரசாணையமர்வு அலுவலர்களுக்கான வெற்றிடங்கள் உள்ளன :

2. கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளையுடைய விண்ணப்பதாரிகளிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன :-

***பரிபாலன நீதிப் பிரிவு :***

***தலைமை நீதி அதிகாரி - நிரந்தர/தொண்டர் :***

*வழக்கறிஞராக பட்டம் பெற்றிருப்பதுடன் வழக்கறிஞராக 15 வருட அனுபவம் இருத்தல் வேண்டும்.*

3. **வேறு தகைமைகள் :**

(அ) *தேசிய இனம்.-* ஓர் இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

(ஆ) குடியியல் நிலை (விவாகமானவர்/விவாகமாகாதவர்).

(இ) பால் (ஆண்/பெண்).-

(ஈ) வயது.- 2010.12.31 ஆந் திகதிக்கு வயது 45 இற்கு கூடாதிருத்தல் வேண்டும்.

(உ) *உயரம்.-* ஆண்கள் 5 அடி 5 அங்குலமும் அதற்கு மேலும்
பெண்கள் 5 அடி 4 அங்குலமும் அதற்கு மேலும்.

(ஊ) *மார்பு.-* ஆண் 32" (குறைந்தது)

(எ) *தொலைபார்வை.-* இரண்டு கண்களிலும் 6/6 (மூக்குக் கண்ணாடியுடன் அல்லது மூக்குக் கண்ணாடி பயன்படுத்தப் படாமல்)

4. தேவையான உயரம், நிறை முதலியவை இல்லாதிருந்தாலும் வான்படைக்கு ஒருவரின் தேவை அல்லது சேவை நன்மை பயக்கும் என வான்படை தளபதியால் ஏற்றுக்கொள்ளப்படும் இடத்தில் அவரின் விண்ணப்பம் விசேட தகைமைகளைக் கொண்டிருப்பின் அது கவனத்திற் கொள்ளப்படும்.

5. வான்படை ஆளுனரால் நியமிக்கப்படும் வைத்திய பரீட்சையில் தேர்ச்சி பெறக்கூடிய தேகாரோக்கியம் உடையவராயிருத்தல் வேண்டும்.

6. விளையாட்டுத்துறையில் ஈட்டியுள்ள அதியுயர் சாதனைகளுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படும்.

7. ***அரச கரும மொழித் தேவைப்பாடுகள்.-*** தேர்ந்தெடுக்கப்பட்ட தேர்வுநாடிகள் இலங்கைக் குடியரசின் 1956 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க அரசகரும மொழிச் சட்டத்தின் ஏற்பாடுகளைச் செயற்படுத்துவதற்காகவும் ஏற்கனவே ஆக்கப்பெற்ற அல்லது இதன் பின்னர் ஆக்கப்பெறும் எவ்விதிகளுக்கும் இணங்கி ஒழுகுமாறு தேவைப்படுத்தப்படுவர்.

8. தகைமைகளையும் அனுபவத்தையும் பொறுத்து தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரிகளுக்கு இலங்கை வான்படையில் நிரந்தர/ தொண்டர் நிலைகளில் விங் கமாண்டர்/குரூப் கெப்டன் தரத்தில் ஆணைபெற்ற பதவி வழங்கப்படும்.

9. தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரிகள் வான்படை ஏவுநரினால் தீர்மானிக்கப்படும் காலங்களில் பயிற்சி பெறுவதற்கு தேவைப்படுத்தப் படுவார்கள். பயிற்சிக் காலங்களில் துர்நடத்தை காரணமாக அல்லது அவரது கட்டுப்பாட்டுக்குள் உள்ள காரணங்களுக்காக அவர் தகுதியற்றவர் என எந்த நேரத்திலும் அதிகாரிகளினால் முறைப்பாடு செய்யப்பட்டால் அவருக்களிக்கப்பெற்ற ஆணை மீளப்பெறுவதற்கு அவர் ஆளாதல் வேண்டும். அத்துடன் அல்லது இலங்கை வான்படை ஒழுக்காற்று ஒழுங்குவிதிகளுக்கிணங்க வேறு ஒழுக்காற்று நடவடிக்கைகளுக்கும் அமைந்தவராதல் வேண்டும்.

10. வான்படை அலுவலர்கள் வான்படைச் சட்டத்தினாலும் காலத்துக்குக் காலம் வழங்கப்படும் கட்டளைகளினாலும் ஆளப்படுகிறார்கள்.

11. இலங்கை வான்படை ஆணைபெற்ற அலுவலர் ஒருவரின் சேவை நிபந்தனைகள் காலத்துக்குக்காலம் திருத்தப்பட்டவாறான 1951 ஆம் ஆண்டு ஏப்பிறல் 27 ஆந் திகதிய 10, 240 ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட இலங்கை வான்படை (நிரந்தர அத்துடன் நிரந்தர உப சேவை) ஒழுங்குவிதிகளின் நியதிகளின்படி "அலுவலர் ஒருவருக்கு பைலற் ஒபிசர் அல்லது ஏற்புடைத்தாயின் அதைவிட உயர்ந்த தரத்தில் நிரந்தர ஆணைபெற்ற பதவி வழங்கப்படும். வான்படைச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் நியதிகளின்படி "அலுவலர் ஒவ்வொருவரும் சனாதிபதி விரும்பும் வரைக்குமே தமது நியமனத்தை வைத்திருத்தல் வேண்டும்." ஆயின் ஒருதலைப்பட்சமாக தமது ஆணைபெற்ற பதவியிலிருந்து விலகுவதற்கான உரிமை எதுவும் அலுவலர் ஒருவருக்குக் கிடையாது. ஆனால் வான்படைச் சட்டத்தின் 11 ஆம் பிரிவின்படி அலுவலர் பதவியிலிருந்து விலகுவது சனாதிபதியினால் அனுமதியளிக்கப் படலாம். பயிற்சி மற்றும் அதைத் தொடர்ந்த கற்கைநெறிகள் தொடர்பிலான கட்டாய சேவைக்காலத்தைக் குறிக்கின்ற ஏதேனும் உடன்படிக்கை செய்திருப்பின் மேலே கூறப்பட்ட வான்படைச் சட்டத்தின் 11 ஆம் பிரிவின்படி அனுமதிக்கப்பட மாட்டா. வான்படையிலிருந்து ஓய்வுபெறுவது வான்படை ஓய்வூதியங்கள், பணிக்கொடைகள் சட்டக்கோவையில் குறித்துரைக்கப்பட்டுள்ள நிபந்தனைகளின்கீழ் 10 ஆண்டுகள் சேவைக்குப்பின் ஏற்புடையதாகும்.

12. அலுவலர் ஒருவர் கடமைக்காக அல்லது பயிற்சிக்காக எந்த நேரத்திலும் உலகத்தின் எப்பாகத்திற்கும் அனுப்பப்படுவதற்கு ஆளாவர்.

13. திருமணமாகாத அலுவலர் ஒருவர் உணவு விடுதியில் வசிப்பதற்கு தேவைப்படுத்தப்படுவர். அவருக்கு தளபாடங்களுடனான இடவசதியும் உணவும் ஏற்பாடு செய்யப்படும். சேவையாளர் சேவைக்கும் ஏற்பாடு செய்யப்படும். திருமணமாகாத அலுவலர்களின் உணவுப்படியும் சேவையாளர் படியும் உணவு விடுதிக்குச் செலுத்தப்படும்.

14. திருமணமான அலுவலர் ஒருவருக்கு கிடைக்கக்கூடியதாக இருந்தால் விவாகமானவர்களுக்கான மனை ஒன்று வழங்கப்படும். வாடகை அறவிடுதல் பகிரங்க சேவையாளருக்கு ஏற்புடைத்தானவாறு இருக்கும். விவாகமானவர்களுக்கான மனைகளில் வசிக்காத விவாகமான அலுவலர்கள் 15 (ஆ) (16) ஆம் பந்தியில் கூறப்பட்டுள்ள வாறான வாடகைப்படிக்கு உரித்துடையவர்களாவார்கள்.

15. (அ) இலங்கை வான்படையில் ஆணைபெற்ற அலுவலர்களுக்கான சம்பளம் பின்வருமாறு (ஆண்டொன்றுக்கு) :

*விங் கமாண்டர். குரூப் கப்ரன்*

| | |
|---|---|
| *விங் கமாண்டர்* | - ரூபா 3,62,100-20 X 9,480 - ரூபா 5,51,700 |
| *குறூப் கப்ரன்-* | - ரூபா 4,41,060-18 X 12,600 - ரூபா 6,67,860 |

(ஆ) ***வேறு கொடுப்பனவுகள் :***

(1) வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவு ரூபா 5,250 ;

(2) உற்சாகமூட்டுக் கொடுப்பனவு - ஐந்து வருடங்களின் பின்பு ஒவ்வொரு மாதமும் ரூபா 250;

(3) கடினப்படி- மாதமொன்றுக்கு ரூபா 600 ;

(4) விசேட கொடுப்பனவு- யுத்தப் பிரதேசங்களில் பணிபுரிபவர்களுக்கு மாதமொன்றுக்கு ரூபா 5,000 ;

(5) விசேட கொடுப்பனவு- ரூபா 3,000 (ஒவ்வொரு வேலை நாட்களுக்கும் ரூபா 100 வீதம் ;

(6) மேலதிகக் கொடுப்பனவு- மாதமொன்றுக்கு 1,000 ;

(7) சீருடை பேணுதல் படி- மாதமொன்றுக்கு ரூபா 255;

(8) சேவையாளர் படி - மாதமொன்றுக்கு ரூபா 637.50 (வெளியிலிருந்து வசிக்க அனுமதி பெற்றிருந்தால்) ;

(9) உணவுப் படி- மாதமொன்றுக்கு ரூபா 10,609.75 (வெளியிலிருந்து வசிக்க அனுமதி பெற்றிருந்தால்) ;

(10) ஏற்புடைத்தாகுமிடத்து தகைமைப் படி (மாதமொன்றுக்கு ஆகக்கூடியது ரூபா 637.50 வரை) ;

(11) ஆண்டொன்றுக்கு மூன்று சோடி விடுமுறை புகையிரதப் பிரயாணப்பத்திரம் (அலுவலருக்கும், மனைவிக்கும் பிள்ளைகளுக்கும்) ;

(12) அதிகாரி விடுதிகளில் வசிக்கும் அலுவலருக்கு மாதமொரு தடவை விடுதியிலிருந்து சொந்த இருப்பிடம் போய்வருவதற்கு மேலதிகமாக ஒரு சோடி புகையிரதப் பிரயாணப் பத்திரம் அல்லது பஸ் வண்டிக் கட்டணச் செலவு மீளளிப்பு ;

(13) இலவச சீருடையும் பிற சார்பான பொருட்களும் ;

(14) இலவச மருத்துவ வசதிகள் (ஏற்புடைத்தாயின் குடும்பத்தினருக்கும்) ;

(15) திருமணமான அலுவலருக்கு (வெளியிலிருந்து வசிக்க அனுமதிபெற்றிருந்தால் மாத்திரம்) தொழில் புரியும் இடத்திலிருந்து 30 மைல்களுக்கு உட்பட்டதான இடத்திற்குப் பயணம் செய்வதற்கு இ. போ. ச. இலவசப் பயணச்சீட்டு வசதிகள் வழங்கப்படும்.

(16) அரசாங்க குடிமனைகளில் இருப்பாட்சி செய்யாத திருமணமான அலுவலர்களுக்குப் (பைலற் ஆபீசர் இலிருந்து குறூப் கப்ரன் அதற்கு மேலும் மாதமொன்றுக்கு ரூபா 1,850 இலிருந்து ரூபா 4,250 வரை) வாடகைப்படிகள் கொடுபடற்பாலனவாகும்.

16. ஓய்வூதியங்கள்/பணிக்கொடுப்பனவுகள் என்பன காலத்திற்குக் காலம் திருத்தப்பட்டவாறான 1981 ஆம் ஆண்டின் வான்படை ஓய்வூதிய பணிக்கொடுப்பனவு சட்டச் சேவையின் நியதிகளின்படி செலுத்தப்படுவதாகும். வான்படை அலுவலர் அனைவரும் விதவைகள் அனாதைகள் ஓய்வூதிய (ஆயுதப்படைகள்) திட்டத்திற்கு உதவுதொகை செலுத்துனர்களாவர். உதவுதொகைகளின் விகிதங்கள் 1970 ஆம் ஆண்டின் விதவைகள் அனாதைகள் ஓய்வூதிய (ஆயுதப்படை) திட்டத்தின்படியாகும்.

17. **விண்ணப்பதாரிகளுக்கான அறிவுறுத்தல்கள்**.- (அ) விண்ணப்பங்கள் கீழே கொடுக்கப்பட்ட படிவத்தின் நியதிகளின்படி சமர்ப்பிக்கப்பட வேண்டும். எல்லாக் கூடுகளும் கூடியவரை விரிவான விவரங்களுடன் தெளிவாக தமது கையெழுத்தால் நிரப்பப்பட வேண்டும். விண்ணப்பங்கள் 2010.11.19 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு முன் "பிரதான ஆட்சேர்ப்பு அதிகாரி, இலங்கை விமானப்படை, ஏக்கல, கொட்டுகொட" என்ற முகவரிக்கு கிடைக்கக்கூடியதாக பதிவுத் தபாலில் அனுப்பப்படுதல் வேண்டும். (பதிவுத் தபாலில் அனுப்பாத விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா). விண்ணப்பம் அனுப்பப்படும் கடித உறையில் இடதுபக்க மேல் மூலையில் "தலைமை நீதி அதிகாரிகளுக்கான விண்ணப்பம்" எனக் குறிப்பிடப்படுதல் வேண்டும். முடிவுத் திகதியின் பின்னர் கொட்டுகொட, ஏக்கல, இலங்கை வான்படையை வந்தடைவனவும், இந்த அறிவித்தலின் தேவைப்பாடுகளுக்கு அமையாதவையுமான விண்ணப்பங்கள் கவனிக்கப்படமாட்டா.

(ஆ) அரசாங்க சேவையில் /கூட்டுத்தாபனத்தில்/சபையில்/குடியியல் தாபனத்தில் உள்ள விண்ணப்பகாரர்களது விண்ணப்பம் தத்தம் திணைக்களத்தின் / சபையின்/ குடியியல் தாபனத்தின் தலைமையதிகாரிகள் ஊடாகவே அனுப்புதல் வேண்டும். இந்த விண்ணப்பங்கள், விண்ணப்பகாரர் தெரிவுசெய்யப்படின் விடுவிக்கப்படுவர் என்ற சான்றிதழொன்றைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(இ) விண்ணப்பகாரர் தமது விண்ணப்பங்களுடன் பின்வரும் ஆவணங்களின் பிரதிகளை அனுப்புதல் வேண்டும் :-

(1) பிறப்புப்பதிவுச் சான்றிதழ் ;

(2) விண்ணப்பித்த பிரிவுக்கு தேவையான கல்வித் தகைமைகளை ஆதாரப்படுத்தும் சான்றிதழ் ;

(3) விண்ணப்பதாரரை நன்கு அறிந்தவரான பொறுப்புவாய்ந்த இருவரிடம் இருந்து அண்மையில் பெற்ற இரு குணநலச் சான்றிதழ்கள் ;

(4) விளையாட்டுத்துறைகள் பயிலிளவல் பயிற்சி முதலியவற்றை ஆதாரப்படுத்தும் சான்றிதழ்கள்.

(5) விண்ணப்பதாரருக்கு உரித்தான வேறு சான்றிதழ்கள்.

* **குறிப்பு**.- சான்றிதழ்களின் மூலப்பிரதிகள் விண்ணப்பதாரிகள் முதலாம் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படும்பொழுது கட்டாயமாகக் கொண்டுவருதல் வேண்டும்.

18. விண்ணப்பத்தில் கூற்று எதுவும் பிழையானதெனக் காணப்படுமிடத்து, தெரிவுசெய்யப்படுமுன் கண்டுபிடிக்கப்பட்டால் விண்ணப்பதாரரைத் தகைமையற்றவராக்கும். அத்துடன் தெரிவு செய்யப்பட்டபின் கண்டுபிடிக்கப்பட்டால் அவர் பதவியிலிருந்து நீக்கப்படுவார்.

19. **தெரிவுசெய்தல் நேர்முகப்பரீட்சை முதலியன**.- (அ) மேலே கூறப்பட்டுள்ள நிபந்தனையைப் பூர்த்திசெய்பவர்களுள் இருந்து மட்டும் முதனிலை நேர்முகப் பரீட்சை நடாத்தப்படும். அவ்வாறு தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரிகள் வான்படை ஏவுநரின் பணிப்பிற்கிணங்க வைத்திய சோதனைக்கு உட்படுத்தப்படுவர். இதில் தெரிவுசெய்யப்பட்ட விண்ணப்பதாரிகளுக்கு பாதுகாப்பு அமைச்சினால் நியமிக்கப்பட்ட தெரிவுச்சபையொன்றினால் இறுதித் தேர்வு நடாத்தப்படும்.-

(ஆ) நேர்முகப் பரீட்சை ஒன்றின் பின்னர் இறுதித் தெரிவு செய்யப்படும் நபர்களுக்கு அத்தகைய நேர்முகப் பரீட்சைகள்

நடாத்தப்படும் இடம், நேரம், திகதி ஆகியன பற்றி எழுத்தில் அறிவிக்கப்படும். இது தொடர்பாக எதுவித பயணச் செலவோ அல்லது வேறு செலவோ வழங்கப்பட மாட்டா.

(இ) விண்ணப்பகாரர் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டையைக் காண்பிக்க வேண்டும் ;

(ஈ) இறுதி நேர்முகப் பரீட்சைக்குத் தெரிவுசெய்யப்பட்ட விண்ணப்பதாரிகள் வைத்திய சபையொன்றினால் நடாத்தப்படும் வைத்திய பரிசோதனைக்கு உட்படுத்தப்படுவர் ;

(உ) ஒரு தேர்வுநாடியைச் சிபார்சு செய்ய விரும்புவோர் அவருக்கு ஒரு நற்சான்றிதழைக் கொடுப்பதன் மூலம் அங்ஙனம் செய்யலாம். தேர்வுநாடி ஒருவரின் தெரிவில் எந்தவிதமான ஆதரவையும் தேடுதல் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க முயற்சித்தல் அத்தகைய விண்ணப்பகாரரை தகுதியிழக்கச் செய்யும்.

(ஊ) நிராகரிக்கப்படும் விண்ணப்பதாரிகளுக்கு அதுபற்றி அறிவிக்கப்பட மாட்டா.

டபிள்யூ. டி. ஆர். எம். ஜே. குணதிலக,
எயார்சீப் மாஷல்,
வான்படை தளபதி.

தலைமை அலுவலகம்,
இலங்கை வான்படை,
த. பெ. எண். 594,
கொழும்பு.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இலங்கை வான்படை**

*இலங்கை நிரந்தர/தொண்டர் வான்படையின் பரிபாலன நீதிப்பிரிவில் அரசாணைபெற்ற அலுவக பதவி (தலைமை நீதி அதிகாரி*

1. தேசிய இனம் :----.
(இலங்கைப் பிரஜையாயின் வம்சாவழியிலா அல்லது பதிவு முறையிலா? பதிவுமுறையாயின் சான்றிதழின் இலக்கமும் திகதியும் குறிப்பிடுக.) :----.
2. முழுப் பெயர் :----.
(தேசிய ஆளடையாள அட்டையில் உள்ளவாறு)
3. தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் :----.
4. விண்ணப்பிக்கும் பிரிவு :----.
5. நிரந்தர முகவரி :----.
6. நிரந்தர முகவரியின் அண்மையிலுள்ள பொலிசு நிலையம் :--.
7. அஞ்சல் முகவரி :----.
8. பிறந்த திகதி :----.
9. உயரம் :
10. மாவட்டம் :----.
11. தேர்தற் தொகுதி :----.
12. கிராம உத்தியோகத்தர் பிரிவு :----.
13. தொலைபேசி இலக்கம் :----.
14. திருமணமானவரா அல்லது திருமணமாகாதவரா ? :----.
15. பாடசாலை அத்துடன்/அல்லது பல்கலைக்கழகம் பற்றிய விபரங்கள் : ----.

| பாடசாலை/ பல்கலைக்கழக பெயர்கள் | பரீட்சையின் தன்மை க.பொ.த. (சா./த.)/ க.பொ.த. (உ./த.)/ தொழில் தகைமைகள்/ வேறு | ஆண்டு | பொதுப் பாடசாலை களும் சித்தியடைந்த பாடங்களும் (தரம் உட்பட) |
|---|---|---|---|
| | | | |

16. பாடசாலை/பல்கலைக்கழகத்தில் இருந்து விலகியதிலிருந்து புரிந்த தொழில் பற்றிய விபரங்கள் (தேவையாயின்) :-

| தொழில் தருநரின் பெயரும் முகவரியும் | தொழிலின் தன்மை | சேவைக்காலப் பகுதி | |
|---|---|---|---|
| | | இருந்து | வரை |
| | | | |

17. பெற்றோர் பற்றிய விபரங்கள் :-

| முழுப்பெயர் | பிறந்த இடம் | தொழில் | தற்போதைய முகவரி |
|---|---|---|---|
| தந்தை | | | |
| தாய் | | | |

18. பதவிக்கான எவையேனும் சிறப்பான தகைமைகள் :----.
19. விளையாட்டில் தற்போதைய சாதனைகளின் விபரம் :----.
(குழுக்கள் பற்றிய விபரங்களையும் பங்குபற்றிய போட்டிகளையும் திகதியுடனும் பெற்ற சாதனைகளுடனும் தருக) :----.
20. புறம்பான சாதனைகள் (பாடசாலை, பல்கலைக்கழகம் அல்லது வெளி அமைப்புகளில் இருக்கும்பொழுது பெற்ற சாதனைகள்) (திகதிகளுடன் விபரத்தையும் தருக.) :----.
21. இதற்கு முன் ஆயுதப் படையில் தொண்டர் படையில் பயிலிளவல் படையணியில் அல்லது இளம் சாரணர் இயக்கத்தில் ஆற்றிய சேவை : ----.
22. இலங்கை வான்படையில் அல்லது ஆயுதப் படையில் ஏதேனும் சேவையில் அல்லது பொலிஸ் சேவையில் சேர்வதற்கு முன்பு விண்ணப்பித்துள்ளீராயின் விபரங்களையும் அத்தகைய விண்ணப்பத்தின் பேற்றினையும் தருக :----.

*23. சிவில் அல்லது இராணுவ நீதிமன்றத்தினால் தண்டிக்கப்பட்டவராயிருப்பின் அல்லது பிணையில் விடப்பட்டவராயின் விபரங்கள் தருக :----.*

*24. இதற்கு முன்னர் அரசாங்கத் திணைக்களத்திலோ அல்லது பகிரங்கத் துறையில்/ சபையில்/ கூட்டுத்தாபனத்தில் (மத்திய வங்கி/ தேசிய வங்கி/ பல்கலைக்கழகங்கள்/ அரசாங்கத்தின் கட்டுப்பாட்டிலுள்ள கூட்டுப்பங்குத் தொகுதிக் கம்பனிகள் உட்பட) வேலை செய்திருப்பின் வேலையில் இருந்து விலகியதன் காரணம் :----.*

*25. நற்சான்றிதழ்கள் பற்றிய விபரங்கள் :-*

| *பெயர்* | *பதவிப் பெயர்* | *அஞ்சல் முகவரி* |
|---|---|---|
| | | |

*26.* ***விண்ணப்பகாரர் கைச்சாத்திடவேண்டிய வெளிப்படுத்துகை.-***

*மேலே கொடுக்கப்பட்டுள்ள வினாக்களுக்கு நான் கொடுத்துள்ள விடைகள் யாவும் என் அறிவுக்கும் விசுவாசத்துக்கும் சரியானவை என என் மீது ஆணையாக உறுதிப்படுத்துகிறேன். இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்டுள்ள இலங்கை வான்படையினருக்குத் தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரிகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை முறையையும் அவர்கட்குப் பொருத்தமான விதிமுறைகளையும் நான் நன்கு வாசித்து உணர்ந்து கொண்டேன்.*

----,
*விண்ணப்பகாரரின் கையொப்பம்.*

*திகதி :----.*

*11-181*

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## *அரசாங்க மொழிபெயர்ப்பாளர் சேவையின் வகுப்பு 1 இன் அலுவலர்களுக்கான வினைத்திறன்காண் தடைப் பரீட்சை – 2010*

*1994.07.26 ஆந் திகதிய 829/7 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்டுள்ள மொழிபெயர்ப்பாளர் சேவை தொடர்பான பிரமாணக் குறிப்பில் பந்தி 08 இன்கீழ் மேற்கொண்டுள்ள ஏற்பாடுகளின்படி மொழிபெயர்ப்பாளர் சேவை வகுப்பு I இன் அலுவலர்களுக்கான வினைத்திறன்காண் தடைப்பரீட்சை, பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் 2011, பெப்புருவரி மாதம் கொழும்பில் நடாத்தப்படும். இப்பரீட்சைக்கு சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் தோற்றலாம். பரீட்சைக்கு விண்ணப்பித்த மொழிமூலத்தை பின்னர் மாற்றுவதற்கு அனுமதி வழங்கப்பட மாட்டாது.*

*2. இப்பரீட்சைக்கான மாதிரி விண்ணப்பப்படிவமொன்று இவ்வறிவித்தலின் இறுதியில் வெளியிடப்பட்டுள்ளது. சரியாகவும், தெளிவாகவும் தயாரிக்கப்படும் விண்ணப்பங்கள் தமது திணைக்களத் தலைவர் ஊடாக 2010, திசெம்பர் மாதம் 13 ஆந் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் "பரீட்சை ஆணையாளர் நாயகம், இலங்கை பரீட்சைத் திணைக்களம், ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைக் கிளை, பெலவத்தை, பத்தரமுல்லை" எனும் முகவரிக்கு வந்தடையும் வண்ணம் பதிவுத்தபாலில் அனுப்பிவைக்கப்படல் வேண்டும். பரீட்சை ஆணையாளர் நாயகத்துக்கு முன்வைக்கப்படும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் பரீட்சையின் பெயர் குறிப்பிடப்படல் வேண்டும். விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.*

*3.* (i) *விண்ணப்பப்படிவத்தில் தலைப்பு இலக்கம் 1.0 இலிருந்து 2.10 வரையிலான பந்திகளை 1 ஆவது பக்கத்திலும் ஏனையவை 2 ஆம் பக்கத்திலும் அடங்கும் வண்ணம் விண்ணப்பப்படிவத்தை 8" x 12" அளவிலான தாளொன்றின் இரு பக்கங்களையும் உபயோகித்து தயாரித்துக்கொள்ளுதல் வேண்டும். விண்ணப்பப்படிவத்தை தட்டச்சிலிட்டு தயார் செய்துகொள்ள முடியுமாயினும் அதை விண்ணப்பதாரரின் கையெழுத்திலேயே நிரப்புதல் வேண்டும். மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமையாத மற்றும் முழுமை பெறாத தகவல்கள் குறிப்பிட்டுள்ள விண்ணப்பப்படிவங்கள் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். விண்ணப்பப்படிவத்தின் நிழற்படப் பிரதியொன்றை தம்வசம் வைத்துக்கொள்ளுதல் பயனுள்ளதாகும்.*

(ii) *அரச கரும மொழிக் கொள்கையின் நோக்கங்களுக்காக சகல விண்ணப்பதாரிகளும் தமது விண்ணப்பப்படிவங்களை அரச கரும மொழியில் தயாரித்தல் வேண்டும் என்பதுடன் அவற்றினை அதே மொழியில் நிரப்பவும் வேண்டும். பரீட்சை விண்ணப்பப்படிவத்தின் தலைப்பில் குறிப்பிட்டுள்ள பரீட்சையின் பெயர் சிங்கள விண்ணப்பப்படிவங்களில் சிங்களத்திற்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் தமிழ் விண்ணப்பப்படிவங்களில் தமிழ் மொழிக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் குறிப்பிடவும்.*

***4. பாடவிதானமும் பரீட்சைத் திட்டமும் :***

*முதலாம் பாடம்.- வினாத்தாள் இல. 01 :*

(i) *பொது முக்கியத்துவம் வாய்ந்த ஒரு பந்தி ; அத்துடன்*
(ii) *பின்வருவனவற்றிலிருந்து பிரித்தெடுத்த பகுதிகள் :-*

*(அ) ஓர் அரச கரும ஆவணம் அல்லது அறிக்கை ; அத்துடன்*
*(ஆ) ஒரு புதினப்பத்திரிகை விடயம் அல்லது அறிக்கை*

*மொழிபெயர்த்தல்.- விண்ணப்பதாரர்கள் தனது மொழி பெயர்ப்பு மொழி மூலத்திற்கேற்றபடி தெரிவுசெய்யும் பின்வரும் முறைகளுள் ஒன்றில் மொழிபெயர்த்தல்-*

(i) *சிங்களத்திலிருந்து தமிழ் மொழிக்கு*
(ii) *சிங்களத்திலிருந்து ஆங்கில மொழிக்கு*
(iii) *தமிழிலிருந்து ஆங்கில மொழிக்கு*

*மூன்று (03) மணித்தியாலங்களைக் கொண்ட வினாத்தாள் - 100 புள்ளிகள்*

*இரண்டாம் பாடம் - வினாத்தாள் இல. 02*

(i) *பொது முக்கியத்துவம் வாய்ந்த ஒரு பகுதி ; அத்துடன்*

(ii) பின்வருவனவற்றிலிருந்து பிரித்தெடுத்த பகுதிகள்:-

(அ) ஓர் அரச கரும ஆவணம் அல்லது அறிக்கை ;
(ஆ) ஒரு புதினப்பத்திரிகை விடயம் அல்லது அறிக்கை;

விண்ணப்பதாரர்கள் தனது மொழி மூலத்திற்கேற்றபடி தெரிவுசெய்யும் பின்வரும் முறைகளுள் ஒன்றில் மொழி பெயர்த்தல்-

(i) தமிழிலிருந்து சிங்கள மொழிக்கு
(ii) ஆங்கிலத்திலிருந்து சிங்கள மொழிக்கு
(iii) ஆங்கிலத்திலிருந்து தமிழ் மொழிக்கு

மூன்று 03 மணித்தியாலங்களைக் கொண்ட வினாத்தாள் ஒன்று - 100 புள்ளிகள்

* இப்பரீட்சையில் சித்தியெய்துவதற்கு விண்ணப்பதாரிகள் ஒவ்வொரு வினாத்தாளி லும் நூற்றுக்கு நாற்பது (40%) அல்லது அதற்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெற்றிருத்தல் வேண்டும்.

5. விண்ணப்பதாரிகளின் கையெழுத்துக்கள் பற்றி கவனத்தில் கொள்ளப்படும்.

6. **பரீட்சைக் கட்டணங்கள்**.- இப்பரீட்சைக்கான பரீட்சைக் கட்டணங்கள் விண்ணப்பதாரர்களிடமிருந்து பின்வரும் அடிப்படையில் அறவிடப்படும் :-

(அ) முதன் முறைக்காக கட்டணமெதுவும் அறவிடப்பட மாட்டாது.

(ஆ) அடுத்துள்ள சந்தர்ப்பத்தில் தோற்றுவதற்கான கட்டணங்கள் முழுப்பரீட்சை எடுப்பதற்கு ரூபா 400 ஆகவும் தனித்து ஒரு பாடம் எடுப்பின் ரூபா 200 ஆகவும் இருக்கும்.

(இ) பரீட்சைக் கட்டணம் பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் வருமானத் தலைப்பு 2003-02-13 இற்கு வரவு வைத்து தீவில் அமைந்திருக்கும் எந்தவொரு தபால் அலுவலகத்திற்கும் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை உரிய இடத்தில் ஒட்டுதல் வேண்டும். அப்பற்றுச்சீட்டின் புகைப்படப் பிரதியைத் தம்வசம் வைத்துக்கொள்ளுதல் பயனுடையதாகும்.

(ஈ) எக்காரணம் கொண்டும் பரீட்சைக் கட்டணங்கள் மீளளிக் கப்படவோ அல்லது வேறோர் பரீட்சைக்கு மாற்றப்படவோ இடமளிக்கப்பட மாட்டாது.

7. **பரீட்சைக்கு அனுமதித்தல்**.- (i) விண்ணப்பங்களை அனுப்பிவைத்த சகல பரீட்சார்த்திகளுக்கும் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் அனுமதி அட்டைகள் வழங்கப்படும். பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்திகள் பரீட்சை மண்டப மேற்பார்வையாளரிடம் தமது கையொப்பத்தை உறுதிப்படுத்திய அனுமதி அட்டையைச் சமர்ப்பித்தல் வேண்டும். அனுமதி அட்டைகள் இன்றி அவர்களை பரீட்சை மண்டபத்திற்கு நுழைவதற்கோ அல்லது பரீட்சைக்குத் தோற்றுவதற்கோ அனுமதி வழங்கப்பட மாட்டாது. விண்ணப்பதாரி களிடம் அனுமதி அட்டைகள் வழங்கியவுடன் அது தொடர்பாக இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் பத்திரிகை அறிவிப்பொன்றை வெளியிடும். அவ் அறிவிப்பு வெளியாகி 2 அல்லது 3 நாட்கள் முடிவடைந்த பின்னரும் அனுமதி அட்டை கிடைக்கப்பெறாவிடின் அறிவிப்பில் குறிப்பிட்டுள்ளவாறு அது தொடர்பாக இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்திற்கு அறிவித்தல் வேண்டும். உங்கள் வசம் உள்ள விண்ணப்பப்படிவமும் அத்துடன் உரிய பணம் செலுத்திய பற்றுச்சீட்டின் உறுதிப்படுத்திய நிழற்படப் பிரதியொன்றும், திணைக்களத் தலைவரால் பதிவுசெய்த பற்றுச்சீட்டும் கொழும்பிற்கு வெளிப்பிரதேசமெனில் அனுமதி அட்டையை அனுப்புவதற்காக பெக்ஸ் இலக்கம் குறிப்பிடப்பட்ட கோரிக்கைக் கடிதமும் உங்கள் வசம் வைத்துக்கொண்டு இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்திடம் அறிவித்தல் பயனுள்ளதாகும்.

(ii) ஒவ்வொரு பரீட்சார்த்திக்கும் அனுமதி அட்டையுடன் பிரத்தியேகமாக நேரசூசியொன்றும் வழங்கப்படும்.

(iii) இப்பரீட்சையை நடாத்துதல் தொடர்பாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதித்துரைக்கப்பட்ட விதிகளுக்கும், ஒழுங்குவிதிகளுக்கும் பரீட்சார்த்திகள் கட்டுப்பட்டவர்களாக இருத்தல் வேண்டும். அவ்விதிகளை மீறினால் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் எத்தண்டனைக்கும் உள்ளாதல் வேண்டும்.

(iv) விண்ணப்பதாரிகளுக்கு விதித்துரைக்கப்பட்டுள்ள விதிகள், ஒழுங்குவிதிகள் இவ்வர்த்தமானியின் ஆரம்பத்தில் அச்சிடப்பட்டுள்ளது.

**குறிப்பு**.- பரீட்சை எடுப்பதற்கு அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்ட தானது ஒரு விண்ணப்பதாரர் அப்பரீட்சையை எடுப்பதற்கான அனைத்துத் தகைமைகளையும் கொண்டிருக்கிறார் என ஏற்றுக் கொள்ளப்பட்டதாகக் கருதப்படலாகாது.

8. பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் அனுமதி அட்டைகள் வழங்கப்பட்டுள்ள பரீட்சார்த்திகள் பரீட்சைக்குத் தோற்றக்கூடியதாக திணைக்களத் தலைவர்கள் கடமை விடுமுறை வழங்க வேண்டும். பிரயாணச் செலவுகள் வழங்கப்பட மாட்டாது.

9. **பரீட்சார்த்தியின் ஆளடையாளம்**.- பரீட்சார்த்திகள் தாம் எடுக்கும் ஒவ்வொரு பாடத்தின்போதும் பரீட்சை மண்டப மேற்பார்வையாளருக்கு தமது அடையாளத்தை நிரூபித்தல் வேண்டும். இதன் நோக்கத்திற்காக பின்வரும் ஆவணங்களுள் ஏதாவதொன்று ஏற்றுக்கொள்ளப்படும் :

(அ) ஆட்பதிவுத் திணைக்களத்தால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டை ;
(ஆ) ஒரு செல்லுபடியான கடவுச்சீட்டு

அனுமதி அட்டையுடன் மேற்கூறிய ஆவணங்களுள் ஒன்றைச் சமர்ப்பிக்கத் தவறும் விண்ணப்பதாரர்களின் பரீட்சார்த்த உரிமை பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் தற்றுணிபின்படி இரத்துச் செய்யப்படலாம்.

10. இப்பரீட்சை பற்றிய அறிவித்தலில் ஏற்பாடுகள் செய்யப்படாத ஏதேனுமொரு விடயம் தொடர்பில் இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் தீர்மானம் இறுதித் தீர்மானமாயிருக்கும்.

பி. பீ. பீ. எஸ். அபேகுணரத்ன,
இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம்.

இணைந்த சேவைகள் பிரிவு,
பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 07,
2010, ஒற்றோபர் மாதம் 27.

மாதிரி விண்ணப்பப்படிவம்

(அலுவலக உபயோகத்திற்கு மட்டும்)

**அரசாங்க மொழிபெயர்ப்பாளர் சேவையின் வகுப்பு 1 இன் அலுவலர்களுக்கான வினைத்திறன்காண் தடைப்பரீட்சை -2010**

Efficiency Bar Examination For Officers in Class I of the Government Translators' Service – 2010

(**கவனிக்க வேண்டியது** : விண்ணப்பப்படிவம் சரியாகவும் தெளிவாகவும் பரீட்சார்த்தியால் தமது சொந்தக் கையெழுத்தில் நிரப்பப்படல் வேண்டும்.)

1. வர்த்தமானி அறிவித்தலின் பந்தி 4 இற்கு அமைய நீங்கள் மொழிபெயர்ப்பு செய்யவேண்டிய முறை :

வினாத்தாள் இலக்கம் 01 :
சிங்களத்திலிருந்து தமிழ் மொழிக்கு - 1
சிங்களத்திலிருந்து ஆங்கில மொழிக்கு - 2
தமிழிலிருந்து ஆங்கில மொழிக்கு - 3
(உரிய இலக்கத்தை கூட்டினுள் இடவும்)

வினாத்தாள் இலக்கம் 02 :
தமிழிலிருந்து சிங்கள மொழிக்கு - 4
ஆங்கிலத்திலிருந்து சிங்கள மொழிக்கு - 5
ஆங்கிலத்திலிருந்து தமிழ் மொழிக்கு - 6
(உரிய இலக்கத்தை கூட்டினுள் இடவும்)

வினாத்தாள் இலக்கம் 01 அல்லது வினாத்தாள் இலக்கம் 02 அல்லது இரு வினாத்தாள்களுக்கும் தோற்ற முடியும்.

2. **தனிப்பட்ட விடயங்கள் :**

2.1 முதலெழுத்துக்களை இறுதியாக குறிப்பிட்டு, முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) : ----.
உதாரணம் : SILVA, A. B.

2.2 முதலெழுத்துக்களால் குறிக்கப்படும் பெயர்கள் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) :----.

2.3 முழுப்பெயர் (சிங்களத்தில்/தமிழில்) :----.

2.4 அலுவலக/திணைக்கள/அமைச்சின் பெயர் :----.

2.5 அலுவலக முகவரி (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) :----.
(அனுமதி அட்டை இம்முகவரிக்கு அனுப்பப்படும்)

2.6 பால் : (பெண்-1, ஆண்-0)
(உரிய இலக்கத்தை கூட்டினுள் இடவும்.)

2.7 பிறந்த திகதி :

ஆண்டு : மாதம் : திகதி :

2.8 தேசிய அடையாள அட்டை இலக்கம் :

2.9 தற்போது வகிக்கும் பதவி :----.

2.10 நியமனக் கடிதத்தின் இலக்கம் :----.

3. 3.1 நீர் இப்பரீட்சைக்கு முதற்தடவையாக தோற்றுகின்றீரா ? :----.

3.2 இல்லாவிட்டால், பரீட்சைக் கட்டணம் செலுத்தி பெற்றுக் கொள்ளப்பட்ட (இணைத்துள்ள) பற்றுச்சீட்டின் இலக்கம் : ----.
திகதி :----.
வழங்கப்பட்ட அஞ்சல் அலுவலகம் :----.

பாடமொன்றிற்காக ரூபா 200 மற்றும் சகல பரீட்சைக்குமாக ரூபா 400 கொடுப்பனவிற்காக, ஏதாவது அஞ்சல் அலுவலகத்திலிருந்து பெறப்பட்ட பற்றுச்சீட்டானது இங்கு ஒட்டப்படுதல் வேண்டும். (பற்றுச்சீட்டின் ஒளிப்படப் பிரதியொன்றை தம்வசம் வைத்துக்கொள்ளவும்)

4. **விண்ணப்பதாரியின் சான்றிதழ் :**

மேற்தரப்பட்டுள்ள விபரங்கள் சரியானவை என்றும், மேலே குறிப்பிடப்பட்டுள்ள மொழி மூலம் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு நான் தகுதியுடையவரென்றும், எவ்வகையான ஒழுக்காற்றுத் தண்டனைக்கும் ஆளாகவில்லை என்றும் நான் வெளிப்படுத்துகிறேன். இப்பரீட்சைக்காக விதித்துரைக்கப்பட்ட ஒழுங்கு விதிகளுக்கு நான் அமைந்தொழுகவும் உடன்படுகிறேன். மேலும் பரீட்சை நடாத்துதல் தொடர்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு நான் கீழ்ப்படிகிறேன் எனவும் வெளிப்படுத்துகின்றேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

5. **திணைக்களத் தலைவரின் சான்றிதழ் :**

(i) இப்பரீட்சார்த்தி இத்திணைக்களத்திலுள்ள மொழிபெயர்ப்பாளர் சேவையின் வகுப்பு 1 ஐச் சேர்ந்த மொழிபெயர்ப்பாளர் என்றும்,
(ii) மேலே தரப்பட்டுள்ள விபரங்கள் சரியானவை எனவும்,
(iii) இவருடைய வேலையும், நடத்தையும் எப்பொழுதும் திருப்தியானது என்றும், கடந்த ஐந்து வருட காலத்தில் (எச்சரிக்கைகள் தவிர) இவர் எவ்வகையான ஒழுக்காற்றுத் தண்டனைக்கும் ஆளாகவில்லை என்றும்,
(iv) இவர் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகைமையுடையவர் என்றும்,
(v) இவரால் பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்டு அதற்கான பற்றுச்சீட்டு ஒட்டப்பட்டுள்ளது என்றும் (தேவையற்றது எனின் கீறிவிடவும்.)

இத்தால் நான் சான்றுப்படுத்துகின்றேன்.

----,
திணைக்களத் தலைவரின் கையொப்பமும் பதவி முத்திரையும்.

பதவிப் பெயர் :----.
முகவரி :----.
திகதி :----.

11-299

## சுகாதார அமைச்சு

### துணை மருத்துவத் துறையில் (PSM) மருந்தாளர்கள் தொழிற்பயிற்சிக்கு மாணவர்களை இணைத்துக்கொள்ளல் - 2010

சுகாதார அமைச்சில் துணை மருத்துவத் துறையில் மருந்தாளர் பயிற்சி நெறிக்கு பயிலுனர்களை இணைத்துக்கொள்வதற்காக தகைமையுள்ள இலங்கை பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. தகைமையுடைய மாணவர்கள் 2007-2008 க. பொ. த. (உ. த.) பரீட்சையின் ''Z'' புள்ளிகளின் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட முதன்மை அட்டவணையிலிருந்து தெரிவுசெய்யப்படுவர்.

2. தெரிவானது மாவட்ட ரீதியில் உள்ள சனத்தொகைக்கு அமைய தேவையான மாணவர்கள் பயிற்சிக்காக சேர்த்துக்கொள்ளப்படுவர்.

3. (i) இது ஒரு முழு நேர பயிற்சிநெறியாகும். எனவே வேறு பயிற்சிநெறிகளுக்கு 5 வேலை நாட்களிலும் சனிக்கிழமைகளில் முற்பகலிலும் செல்லும் மாணவர்கள் இதில் இணைந்துகொள்ள முடியாது.

(ii) நீங்கள் ஏதாவதொரு பல்கலைக்கழகத்தில் பதிவுசெய்திருந்தால் அப்பதிவானது விண்ணப்ப திகதிக்கு முன்னர் இரத்துச்செய்யப்படல் வேண்டும். (பல்கலைக்கழகத்தில் விரிவுரைகளுக்கு நீங்கள் சமுகமளிக்காவிடினும்கூட பதிவு இரத்துச் செய்யப்படல் வேண்டும்.

(iii) நீங்கள் ஏதாவதொரு பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்றிருந் தால் அப்பட்டத்தின் திகதியானது (Effective Date) விண்ணப்ப திகதிக்கு முன்னதாக இருக்க வேண்டும்.

**குறிப்பு :-**

பந்தி 3.11 இல்/அல்லது 03.111 இன்படி பல்கலைக்கழகப் பதிவை இரத்துச் செய்திருந்தாலோ, தற்போது பட்டம் பெற்று இருந்தாலோ மருந்தாளர் பயிற்சி நெறி வர்த்தமானியின் அறிவித்திலின்படி நீங்கள் அனுமதி அல்லது தெரிவுசெய்யப்பட்டுள்ளீர்கள் என்பதாக குறிப்பிடப்படவில்லை.

பல்கலைக்கழகப் பதிவை இரத்துச் செய்திருந்தாலும் அல்லது நீங்கள் பட்டப் படிப்பைப் பூர்த்திசெய்திருந்தாலோ இப் பயிற்சிநெறிக்கு தேவையான Z புள்ளி பெற்றிருக்காவிட்டால் நீங்கள் தகுதியற்றவாரக் கணிக்கப்படுவீர்கள்.

தாங்கள் தேவையான Z புள்ளியைப் பெற்றிருந்தாலும் பந்தி 03.1 03.11, உம் 03.111 இல் குறிப்பிடப்பிடப்பட்டவை பூர்த்தி செய்யப் படாவிடின் தாங்கள் இப் பயிற்சிநெறிக்குத் தகுதியற்றவராவீர்கள்.

4. பயிற்சி நெறியுடன் பயிற்சிக்குரிய காலம் இரண்டு வருடங்களாகும்.

5. **கல்வித் தகைமைகள்.-**

5.1) க.பொ.த.(சா/த) பரீட்சையில் சிங்களம்/தமிழ்மொழி, கணிதம், விஞ்ஞானம் உட்பட மேலும் ஒரு பாடத்தில் திறமைச்சித்தியுடன் இரு அமர்வுகளுக்கு மேற்படாதவாறு ஆங்கிலம் உட்பட ஆறுபாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

5.2) 2007 - 2008 க.பொ.த.(உ./த.) பரீட்சையில் தோற்றி இரசாயனவியலில் திறமைச் சித்தியுடன், இணைந்த கணிதம், பௌதிகவியல், உயிரியல், விவசாய விஞ்ஞானம் ஆகிய பாடங்களில் ஏதாவது இரண்டில் ஒரே அமர்வில் சாதாரண சித்தியும் பெற்றிருக்க வேண்டும்.

க.பொ.த.(உ./த.) Z புள்ளி மதிப்பீடு விண்ணப்பீடு விண்ணப்பப்பத்திரத்தில் சேர்க்கப்பட்டிருத்தல் கட்டாயமாகும்.

6. **ஏனைய தகைமைகள்.-** (அ) 2010.12.15 ஆந் திகதியில் 18 வயதுக்குக் குறையாமலும் 30 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

(ஆ) நாட்டில் எந்தவொரு பகுதியிலும் சேவையாற்றச் சம்மதிப்பவராக இருத்தல் வேண்டும்.

(இ) உடற் தகுதியுடன் சுகதேகியாகவும் இருத்தல் வேண்டும்.

(ஈ) விண்ணப்பதாரர் விண்ணப்பிக்கும் மாவட்டத்தில் மூன்று வருடங்களாவது வசித்து வருபவராக இருத்தல் வேண்டும்.

7. **விண்ணப்பிக்கும் முறை.-** (அ) இத்துடன் உள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்தின் பிரகாரம் விண்ணப்பப் படிவத்தைத் தயாரிக்க வேண்டும். அத்துடன் ''சுகாதார சேவை பணிப்பாளர் நாயகம், சுகாதார அமைச்சு, 'சுவசிரிபாய', 385, வண. பத்தேகம விமலவங்ச தேரர் மாவத்தை, கொழும்பு 10'' என்னும் பெயருக்கு கொழும்பு பெரிய தபால் கந்தோரில் மாற்றக்கூடிய முறையில் ரூபா 200.00 இற்கான காசுக்கட்டளை (Money Order) சகல விண்ணப்பகாரரும் விண்ணப் பத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும். விண்ணப்பத்துடன் அனுப்பப்பட்ட பணம் எக் காரணத்திற்காகவும் மீளப் பெறல் முடியாது.

(ஆ) விண்ணப்பதாரியின் கையொப்பம் இலங்கை நிர்வாக சேவை/ கல்விச்சேவை/அரச கணக்காளர்சேவை/அரச பாடசாலை அதிபர்கள்/ சமாதான நீதவான்/சட்டத்தரணி அல்லது வருடாந்த சம்பளம் ரூபா 2,40,360 க்குக் குறையாத அரசாங்க உத்தியோகத்தர் ஆகிய யாராவது ஒருவரினால் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

(இ) முழுமையாக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயர் எழுதப்பட்டு பதிவுத்தபாலில் ''பணிப்பாளர் (நிர்வாகம்) 02, சுகாதார அமைச்சு, 'சுபசிரிபாய', இல.385, வண. பத்தேகம விமலவம்ச தேரர் மாவத்தை, கொழும்பு - 10'' என்ற முகவரிக்கு 2010.12.15 இற்கு முன்னர் கிடைக்கும்படி அனுப்பவேண்டும்.

8. அரசாங்க அல்லது அரச சார்பான நிறுவனங்களில் சேவை புரியபவராக இருந்தால் அவர்களின் விண்ணப்பம் திணைக்களத் தலைவரினூடாக அனுப்ப வேண்டும்.

9. விண்ணப்பங்கள் கிடைத்தமை பற்றி அறியத்தரப்படமாட்டாது.

10. முடிவுத் திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

11. இவ்வறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள விதிகளுக்கமையாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

12. மேற்குறிப்பிட்ட கல்வித் தகைமைகள் மற்றும் ஏனைய தகைமை களுடன் விண்ணப்பித்தவர்கள் நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப் படுவார்கள். விண்ணப்பதாரிகள் பின்வரும் ஆவணங்களின் மூலப்பிரதிகளை (மேலதிக பிரதிகளுடன்) நேர்முகப் பரீட்சையின்போது சமர்ப்பிக்க வேண்டும். சமர்ப்பிக்க முடியாத பட்சத்தில் அவருக்கான நேர்முகப் பரீட்சை இரத்துச் செய்யப்படும்.

(i) பிறப்புச் சான்றிதழ் ;

(ii) கல்விச் சான்றிதழ்களின் மூலப்பிரதிகள்.- மூலப்பிரதிகள் இல்லாதவிடத்து வெளிவாரி பரீட்சார்த்தியென்றால் பரீட்சார்த்திகளுக்குக் கொடுக்கப்பட்ட பெறுபேறு படிவங்கள் அல்லது பாடசாலை பரீட்சை அமர்வு என்றால் குறித்த பாடசாலை அதிபர்களினால் கொடுக்கப்பட்ட கடிதத்தின் மூலப்பிரதி ;

(iii) பரீட்சைத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட க. பொ. த. (உ. த.) பரீட்சை Z புள்ளிகள் அளவு குறிப்பிடப்பட்டிருக்கும் சான்றிதழ் ;

(iv) தேசிய அடையாள அட்டை/கடவுச்சீட்டு/சாரதி அனுமதிப் பத்திரம் ;

(v) குறிப்பிட்ட மாவட்டத்தில் 3 ஆண்டுகள் வசித்ததற்கான கிராம சேவையாளரினால் வழங்கப்பட்ட சான்றிதழ் பிரதேச செயலாளரினால் உறுதிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்;

13. **பயிற்சித் திட்டம்**.- (i) தெரிவு செய்யப்பட்ட பரீட்சார்த்திகள் மருந்தாளர் பயிற்சிநெறிக்காக அந்தந்த பாடசாலைகளுக்கு அனுமதிக்கப்படுவர். பயிற்சியாளர்களுக்கு ஆங்கில மொழிமூலம் பயிற்சிகள் வழங்கப்படும்.

(ii) பயிலுநர்கள் பயிற்சி பாடசாலைகளில் நடைமுறையிலிருக்கும் சட்ட விதிகளுக்கும் மற்றும் திணைக்களத்தினால் காலத்திற்குக் காலம் வெளியிடப்படும் கட்டளைக்கும் கட்டுப்படல் வேண்டும்.

(iii) பயிற்சிக் காலத்தினுள் நடத்தப்படும் பரீட்சைகளில் சித்தியடையத் தவறும் அல்லது செயற்பாடுகள், நடத்தைகளில் அதிருப்தி கண்டறியப்படும் அல்லது பயிற்சிப்பாடசாலை விதிமுறைகளைப் பின்பற்றத் தவறும் பயிற்சியாளர்கள் இப்பயிற்சிக்காலத்தின் எச்சந்தர்ப்பத்திலும் எதுவித நஷ்டஈடுகளும் வழங்கப்படாமல் விலக்கப்படுவர்.

(iv) இப்பயிற்சிக் காலத்தில் கொடுப்பனவாக மாதாந்தம் ரூபா 12,360 வழங்கப்படும்.

(v) பயிலுநர்கள் பயிற்சிப் பாடசாலைகளுக்கு அனுமதிக்கப்படும் போது பயிலுநரானவர், பயிற்சியை வெற்றிகரமாக பூர்த்தி செய்வதாகவும் பயிற்சியின்போது அதனைவிட்டு விலகமாட்டேன் எனவும், பயிற்சியின் பின் சுகாதார திணைக்கள சேவையில் நியமனம் வழங்கப்படின் ஆகக் குறைந்தது 10 வருடங்கள் சேவையாற்றுவேன் எனவும் சுகாதார சேவை பணிப்பாளர் நாயகத்துடனான ஒப்பந்தத்தில் கைச்சாத்திட வேண்டும். பயிற்சி நெறியிலிருந்து விலகுவதாயின் அல்லது பயிற்சியில் தொடர முடியாவிடின் அல்லது மேற்குறிப்பிட்ட (iii) இன் பிரகாரம் பயிற்சியிலிருந்து நீக்கப்பட்டால் திணைக்களத்தினூடாக அரசாங்கம் அவருக்காக வழங்கிய கொடுப்பனவுகளையும் மேற்கொண்ட செலவுகளையும் பயிலுநர் மீள்செலுத்த வேண்டும். இல்லாவிடின், அவற்றை மீளப் பெறுவதற்கான உரிய நடவடிக்கைகளை திணைக்களம் மேற்கொள்ளும்.

14. **சேவைக்கு அமர்த்தல் விதிகள்**.- பயிற்சி நெறி முடிவில் நிரந்தர நியமனங்கள் வழங்குவதற்கு திணைக்களம் கட்டுப்படவில்லை. எவ்வாறாயினும் இறுதிப் பரீட்சையில் சித்திபெறும் பயிலுநர்களுக்கு விண்ணப்பிக்கும் மாகாண வெற்றிடங்களும் மேற்குறிப்பிட்ட சேவையின் தரம் III ற்கான நியமனங்கள் அவர்களின் பெறுபேறுகளின் முதன்மை அடிப்படையில் வழங்கப்படும். (முதல் நியமனத் திகதியிலிருந்து குறைந்தது இரண்டு ஆண்டுகள் கொடுக்கப்பட்ட நிலையத்தில் சேவையாற்ற வேண்டும் என்பது கட்டாயமாகும்.)

15. விண்ணப்பங்களை நிரப்பும்போது கல்வி மற்றும் ஏனைய தகைமைகளை மிகவும் கவனமாகவும் சரியாகவும் நிரப்பவும். பயிற்சிகளின்போது அல்லது நியமனங்கள் வழங்கப்பட்ட பின்னரோ சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் போலியானவை எனக் கண்டு பிடிக்கப்படின், பயிற்சியிலிருந்து, சேவையிலிருந்து இடைநிறுத்தவோ அல்லது விலக்குவதற்கும் மற்றும் அரச சேவையில் மீள அனுமதிக் கப்படவோ முடியாதவாறு கறுப்புப் பட்டியலில் பெயரை சேர்க்கவும் நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

16. தேர்ந்தெடுக்கப்பட்ட பயிலுநர்கள் இலங்கையில் எப்பகுதியிலும் சேவையினை மேற்கொள்ள தமது உடல் மற்றும் உளத் தகுதியினை நிரூபிப்பதற்கான மருத்துவப் பரிசோதனைக்குட்படுத்தப்படுவர். இப்பரிசோதனையில் தகுதியற்றவர் பயிற்சியைத் தொடர்தல் நிராகரிக்கப்படும்.

17. மேற்கூறப்பட்டபடி சேர்த்துக்கொள்ளப்பட்ட அனைத்து உத்தியோகத்தர்களும் அரச சேவைக்கான அனைத்து சட்டங்களிற்கும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவையின் விதிகள் மற்றும் சுகாதாரத் திணைக்களத்தின் கொள்கை அமுலாக்கலுக்கு ஏற்பவும், நிதி ஒழுங்குவிதிகள் மற்றும் காலத்துக்குக் காலம் ஏற்படுத்தும் அரச சட்ட ஒழுங்கு மாற்றங்களுக்குக் கட்டுப்பட்டு செயற்பட வேண்டும்.

18. இவ்வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்படாத பயிற்சி நெறிக்காக சேர்த்துக் கொள்வது தொடர்பாக எழும் எந்தவொரு விடயத்திற்கும் சுகாதார அமைச்சின் செயலாளரின் முடிவே இறுதியானதாகும்.

(வைத்திய கலாநிதி) ரவீந்ர ருபேரு,
செயலாளர்,
சுகாதார அமைச்சு.

சுகாதார அமைச்சு,
இல. 385, வண. பத்தேகம விமலவன்ச தேரோ மாவத்தை,
கொழும்பு 10,
2010, ஒற்றோபர்.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**சுகாதார அமைச்சு**

"துணை மருத்துவ துறையில் மருந்தாளர்" பயிற்சியின் பொருட்டு மாணவர்கள் ஆட்சேர்ப்பு - 2010

1. (அ) முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில்) :———.

(ஆ) முழுப்பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில்) :———.

(இ) முழுப்பெயர் (சிங்களம்/தமிழில்) :———.

2. தேசிய அடையாள அட்டை இலக்கம் : | | | | | | | | | | |

2. தபால் முகவரி : (ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில்) :-

3. (i) நிரந்தர முகவரி : (ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில்) :-
(ii) மாவட்டம்..................................
(iii) மாவட்டத்தில் நிரந்தர வதிவுடையவரா? (ஆம் / இல்லை) :–
(iv) ஆம் எனில் எவ்வளவு காலம் ?:———.

4. பிறந்த திகதி :-
ஆண்டு ................... மாதம் ................. திகதி .................
2010.12.15 ஆந் திகதியன்று வயது :-
வருடங்கள் :———. மாதங்கள் :———. நாட்கள் :———.

5. ஆண்/பெண் (உரிய கூட்டில் "✓" குறியிடுக)

| | |
|---|---|
| ஆண் | |
| பெண் | |

6. நீங்கள் இலங்கைப் பிரசையா?
(பொருத்தமான கூட்டில் "✓" குறியிடுக)

| | |
|---|---|
| ஆம் | |
| இல்லை | |

7. உயரம் : அடி .............. அங்குலம் ..............

8. கல்வித் தகைமை :

(அ) க.பொ.த. (உ./த.) பரீட்சை (விஞ்ஞான பிரிவு மட்டும்)
(தயவு செய்து பெறுபேற்றுப் பத்திரத்தை இணைக்கவும்)

பரீட்சையின் திகதி :.............
ஆண்டு : ............................. சுட்டெண் : ..........................

Z புள்ளி : ....................

| பாடம் | தரம் |
|---|---|
| 1. | |
| 2. | |
| 3. | |
| 4. | |

(ஆ) க.பொ.த. (சாதாரண தரம்) பரீட்சை - முதலாம் அமர்வு :
வருடம் :..................... சுட்டெண் :....................................

| பாடம் | தரம் | பாடம் | தரம் |
|---|---|---|---|
| 1. | | 6. | |
| 2. | | 7. | |
| 3. | | 8. | |
| 4. | | 9. | |
| 5. | | 10. | |

(இ) க.பொ.த. (சாதாரண தரம்) பரீட்சை - மேலும் அமர்வு :
வருடம் :..................... சுட்டெண் :....................................

| பாடம் | தரம் | பாடம் | தரம் |
|---|---|---|---|
| 1. | | 6. | |
| 2. | | 7. | |
| 3. | | 8. | |
| 4. | | 9. | |
| 5. | | 10. | |

9. ஏதாவது குற்றச் செயலுக்காக நீதிமன்ற தண்டணை அனுபவித்துள்ளீரா? :-
(பொருத்தமான கூட்டில் "✓" குறியிடுக)

| | |
|---|---|
| ஆம் | |
| இல்லை | |

ஆம் எனில் தயவு செய்து காரணத்தை குறிப்பிடுக :-

.......................................................................................................

.......................................................................................................

.......................................................................................................

10. **விண்ணப்பதாரியின் உறுதியுரை :**

(அ) எனது அறிவிற்கு அமைய என்னால் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் அனைத்தும் உண்மையானதும் சரியானதும் என உறுதிமொழிவதுடன் தற்போது முழுநேரப் பாடநெறிகள் எதிலும் ஈடுபடவில்லை எனவும் இத்தால் உறுதிமொழி கின்றேன்.

(ஆ) என்னால் இத்துடன் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் ஏதேனும் பிழையானவை அல்லது போலியானவை எனக் கண்டால் நான் தெரிவுக்கு முன்னராயின் தகுதியற்றவரென்றும், நியமனம் பெற்ற பின்னராயின் நட்டஈடு எதுவுமின்றி விலக்கப்படுவேன் என்பதையும் நான் நன்கறிவேன்.

...................................................................
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :................................

11. **உறுதிப்படுத்தல் :**

விண்ணப்பதாரி திரு. ................................ எனக்கு தனிப்பிட்ட முறையில் பரீட்சயமானவர் என்றும் அவரது கையொப்பத்தை எனது முன்னிலையில்........................ 2010 ஆந் திகதி இடப்பட்டது என்பதையும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

..........................................................
உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்.

திகதி :...............

உறுதிப்படுத்துபவரின் விபரம் :-

முழுப்பெயர் :........................................................................

பதவி :................................................................................

முகவரி :................................................................................

(அலுவலக முத்திரையுடன்)

11-311

## நிதி, திட்டமிடல் அமைச்சு

இலங்கை சுங்கத் திணைக்களம்

### இலங்கை சுங்கத் திணைக்களத்தின் சுங்க பரிசோதகர் தரம் - II ஆம் பதவிகளுக்கு ஆட்சேர்ப்பதற்கான திறந்த போட்டிப் பரீட்சை – 2010

இலங்கைச் சுங்கத் திணைக்களத்தின் சுங்க பரிசோதகர் தரம் - II ஆம் பதவிகளுக்கு ஆட்சேர்ப்பதற்கென திறந்த போட்டிப் பரீட்சையொன்று பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் 2011, சனவரி மாதத்தில் கொழும்பில் மாத்திரம் நடாத்தப்படவுள்ளது. பரீட்சை நடைபெறும் திகதியானது பத்திரிகைகள் மூலம் உரிய காலத்தில் அறிவிக்கப்படும். இப்பரீட்சையினைப் பிற்போடுவதற்கு அல்லது இரத்துச் செய்வதற்கான உரிமையை இலங்கை சுங்கத் திணைக்களம் கொண்டுள்ளது.

கீழே குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைக் கொண்டுள்ள இருபாலாரிடமிருந்தும் இப்பதவிக்காக விண்ணப்பங்கள் கோரப்படு கின்றன.

**2. தகைமைகள் :**

(i) ஒவ்வொரு விண்ணப்பதாரியும் தாம்-

(அ) இலங்கைப் பிரசையாகவும்;
(ஆ) மிகச் சிறந்த ஒழுக்கமுடையவராகவும்;
(இ) விண்ணப்ப முடிவுத் திகதியன்று 18 வயதுக்கு குறையாதவராகவும் 24 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

(ii) உடற் தகைமைகள்.- ஆண்களின் விடயத்தில் அவர்களுடைய உயரமானது 5 அடி 5 அங்குலங்களுக்கு குறையாமலும் மார்புச் சுற்றளவு (விரிவடைந்த நிலையில்) 33 அங்குலங்களுக்கு குறையாமலும் இருத்தல் வேண்டும்.

பெண்களின் விடயத்தில் அவர்களுடைய உயரமானது 5 அடி 3 அங்குலங்களுக்குக் குறையாமல் இருத்தல் வேண்டும்.

(iii) கல்வித்தகைமைகள்.- விண்ணப்பதாரிகள் பின்வரும் கல்வித் தகைமைகளை உடையவர்களாக இருத்தல் வேண்டும் :

(அ) கல்விப் பொதுத் தராதர (உயர்தரப்) பரீட்சையில் ஒரே தடவையில் மூன்று பிரதான பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

(ஆ) கல்விப் பொதுத் தராதர (சாதாரண தர) சான்றிதழ் பரீட்சையில் இரு தடவைகளில் பிரதான பாடங்களான சிங்கள மொழி அல்லது தமிழ் மொழி மற்றும் கணிதம் அடங்கலாக ஐந்து பாடங்களில் திறமைச்சித்தியும் ஆங்கில மொழியில் சாதாரண சித்தி அடங்கலாக ஆறு பாடங்களில் சித்திபெற்றிருத்தல் வேண்டும்.

**3. சேவை நிபந்தனைகள் :**

(i) வேதனம்.- இப்பதவிக்கான திரட்டிய மாதாந்த வேதன அளவுத்திட்டம் வருமாறு.-

ரூபா 14,280-145X7-180X10-240X17= ரூபா 21,175 (பொது நிர்வாக சுற்றறிக்கை இல. 6/2006 (IV)-ஆர்.எஸ்.ஐ. 1-2006)

(ii) இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியத்துக்குரியது என்பதுடன் விதவைகள்/ அநாதைகள் ஓய்வூதியத்திற்கு உதவுதொகை செலுத்துதல் வேண்டும்.

(iii) சித்திபெற்று தெரிவாகும் பரீட்சார்த்திகள் நியமனத் திகதியிலிருந்து மூன்று ஆண்டுகாலப்பகுதிக்கு தகுதிகூர் நிலையில் வைக்கப்பட்டு நியமனம் வழங்கப்படும்.

(iv) நியமனத்தர்கள் நாட்டின் எப்பகுதியிலும் சேவையாற்றக் கூடிய உடல்நிலை தகுதியினை உடையவர்கள் என்பதை பரீட்சிப்பதற்காக அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரினால் நடாத்தப்படும் மருத்துவ பரீட்சைக்கு உட்படுதல் வேண்டும்.

(v) நியமனத்தர்கள் இத்தீவின் எப்பாகத்திலும் இரவிலும் பகலிலும் சேவையாற்றுவதற்கு பணிக்கப்பட்டுள்ளார்கள்.

(vi) அரசாங்க வர்த்தமானி பகுதி I : தொகுதி (IIஅ) வின் தொடக் கத்தில் வெளியிடப்பட்டுள்ள அரசாங்க சேவைப்பதவிகளுக்கு ஏற்புடையதான பொது நிபந்தனைகளுக்கு கவனம் கோரப்படு கின்றது.

**4. பரீட்சைத் திட்டம்.**- ஆட்சேர்ப்புக்கான பரீட்சையானது பின்வரும் மூன்று (3) வினாப்பத்திரங்களைக் கொண்டிருக்கும் :-

| | | புள்ளிகள் |
|---|---|---|
| (i) | உளச்சார்புப் பரீட்சை (1 மணித்தியாலம்) | 100 |
| (ii) | கணிதம் (1 மணித்தியாலம்) | 100 |
| (iii) | ஆங்கில மொழி (1 1/2 மணித்தியாலங்கள்) | 100 |
| | மொத்தம் | 300 |

உளச்சார்புப் பரீட்சை வினாத்தாள்.- இவ்வினாத்தாளானது மொழித் தேர்ச்சி, தர்க்க ரீதியான அறிவு என்பவற்றை பரிசோதிப்பதற்கான கேள்விகளைக் கொண்டிருக்கும்.

கணித வினாத்தாள்.- இவ்வினாத்தாளானது கணித அறிவினை பரிசோதிப்பதற்கான கேள்விகளைக் கொண்டிருக்கும்.

ஆங்கில மொழி வினாத்தாள்.- விண்ணப்பதாரிகளது வாசிப்பு, எழுத்து கிரகித்தல் மற்றும் தொடர்பாடல் திறன்களை பரிசோதிப்பதற் காக தயாரிக்கப்பட்டதாக இருக்கும்.

**குறிப்பு**.- இப்பரீட்சையானது சிங்களம், ஆங்கிலம், தமிழ் ஆகிய மொழிகளில் நடாத்தப்படும். இந்த அறிவித்தலின் பந்தி 2 (iii) இல் குறிப்பிடப்பட்ட தகைமை பரீட்சையில் சித்திபெற்ற மொழியிலேயே விண்ணப்பதாரி பரீட்சைக்கு தோற்ற வேண்டும். (அதாவது- சிங்களம் அல்லது தமிழ் அல்லது ஆங்கிலம்) ஆயினும் தகைமை பரீட்சையை ஆங்கிலம் அல்லது தமிழ் மொழியில் சித்திபெறும் ஒரு விண்ணப்பதாரி அல்லது தமிழ் அல்லது ஆங்கில மொழியில் கல்விகற்ற ஒரு விண்ணப்பதாரி தாம் விரும்பினால் இப்பரீட்சைக்கு சிங்கள மொழியில் தோற்றலாம். பரீட்சார்த்தி விண்ணப்பத்திற் கொடுத்த பரீட்சை மொழியை மாற்றுவதற்கு அனுமதி வழங்கப்பட மாட்டார்.

(i) தெளிவற்ற எழுத்துக்கும் எழுத்துப் பிழைகளுக்கும் புள்ளிகள் குறைக்கப்படும். தெளிவற்ற எழுத்தில் விடையெழுதும் விண்ணப்பதாரி தகைமை நீக்கம் செய்யப்படக் கூடும்.

(ii) தகைமையுடைய விண்ணப்பதாரர்களுக்கு பரீட்சைக்கான அனுமதி அட்டைகளானது பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால்

அனுப்பிவைக்கப்படும். ஆனால் பரீட்சார்த்தி ஒருவருக்கு பரீட்சை அனுமதி அட்டை வழங்கப்படுவது பரீட்சைக்குத் தோற்றுவதற்கான எல்லாவித தகைமைகளையும் பெற்றுள்ளார் என கருதுதல் ஆகாது. பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு பரீட்சார்த்திகள் கீழ்ப்படிதல் வேண்டும். அச்சட்ட திட்டங்களை மீறினால் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைகளுக்கு ஆளாகுதல் வேண்டும்.

(iii) *மதிப்பிடுகை.-* ஒவ்வொரு வினாப்பத்திரத்திற்கும் 60% அல்லது அதற்கு மேற்பட்ட புள்ளிகளைக் கொண்ட விண்ணப்பதாரிகள் தற்போதுள்ள வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு இணங்க மொத்தத்தின் இறங்குவரிசையில் முதற்கட்ட நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். முதற்கட்ட நேர்முகப் பரீட்சையில் விளையாட்டு திறமைகளுக்காக ஆகக்கூடியது 10 புள்ளிகள் வழங்கப்படும். அதன் பின்னர் பொது நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். இதன்போது எவ்வித புள்ளிகளும் வழங்கப்பட மாட்டாது. பரீட்சைகளில் பெறப்பட்ட மொத்தப் புள்ளிகளும் மற்றும் முதற்கட்ட நேர்முகப் பரீட்சையில் வழங்கப்பட்ட புள்ளிகள் மாத்திரம் கவனத்திற்கொள்ளப்படும்.

முதற்கட்ட நேர்முகப் பரீட்சையில் புள்ளிகள் வழங்கப்படும் நடைமுறை :

வலய மட்டத்தில் தனிப்பட்ட விளையாட்டுக்கான புள்ளிகள்.- முதலாமிடத்திற்கு 3 புள்ளிகள், இரண்டாமிடத்திற்கு 2 புள்ளிகள் மற்றும் மூன்றாமிடத்திற்கு 1 புள்ளி.

மாவட்ட மட்டத்தில் தனிப்பட்ட விளையாட்டுக்கான புள்ளிகள்.- முதலாமிடத்திற்கு 4 புள்ளிகள், இரண்டாமிடத்திற்கு 3 புள்ளிகள் மற்றும் மூன்றாமிடத்திற்கு 2 புள்ளிகள்.

தேசிய மட்டத்தில் தனிப்பட்ட விளையாட்டுக்கான புள்ளிகள்.- முதலாமிடத்திற்கு 5 புள்ளிகள், இரண்டாமிடத்திற்கு 4 புள்ளிகள் மற்றும் மூன்றாமிடத்திற்கு 3 புள்ளிகள்.

5. **தெரிவுமுறை அடிப்படை அல்லது தேர்ந்தெடுக்கும் முறை.-** எழுத்துப் பரீட்சையிலும் நேர்முகப் பரீட்சையிலும் சித்தியடைந்த விண்ணப்பதாரர்களுக்கு நியமனம் அளிப்பதற்கு தெரிவுசெய்யப்படுவர். நிரப்பப்படவுள்ள வெற்றிடங்களில் 10% பெண் விண்ணப்பதாரிகளுக்கு ஒதுக்கிவைக்கப்படும்.

**குறிப்பு.-** சுங்கத் திணைக்களத்தினது வேலைகளுக்கேற்ப பெண் அலுவலர்களும் கூட இரவு வேளையில் கடமைபுரிய வேண்டியிருக்கும்.

6. விண்ணப்பதாரர் (ஆண்/பெண்) ஒவ்வொருவரும் பரீட்சைக்குரிய விண்ணப்பத் திகதி முடிவுறுவதற்கு முன்னர் சகல தேவைப்பாடுகளையும் பூர்த்திசெய்திருக்க வேண்டுமென்பது கட்டாயமானதாகும்.

7. **விண்ணப்பிக்கும் முறை :**

(i) இந்த அறிவித்தலின் இறுதியில் மாதிரி விண்ணப்பப்படிவம் ஒன்று பிரசுரிக்கப்பட்டுள்ளது. விண்ணப்பதாரிகள் தாம் பரீட்சை எழுதுவதற்கு உத்தேசித்துள்ள மொழிமூலத்தில் தாமாகவே விண்ணப்பங்களை இங்கு தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு இணங்க தயாரித்து சொந்த கையெழுத்தில் நிரப்புதல் வேண்டும். விண்ணப்பத்தினது ஒவ்வொரு கூட்டிலும் அறிவுறுத்தலுக்கிணங்க விண்ணப்பதாரர்களால் நிரப்பப்பட வேண்டியதுடன் ஏதாவது கூட்டினுள் பொருத்தமற்றவை இருப்பின், அத்தகைய கூட்டினுள் "பொருத்தமற்றவை" என்ற பதம் எழுதப்படல் வேண்டும். கண்டிப்பாக கவனிக்கப்படவேண்டியது யாதெனில், விண்ணப்பத்தில் கூடுகள் நிரப்பப்படாது விடுதலானது விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படுவதற்கான காரணமாக இருக்கும். (விண்ணப்பங்களானது ஏ4 அளவிலான தாளில் தயாரித்தல் வேண்டும். மாதிரி விண்ணப்பத்தில் 1 தொடக்கம் 6 வரையான தலைப்பு இலக்கங்கள் முதல் பக்கத்திலும் 7 தொடக்கம் 11 வரையிலான இரண்டாவது பக்கததிலும் மீதியானவை மூன்றாவது பக்கத்திலும் வரும் விதம் தயாரித்தல் வேண்டும்.). சிங்கள மற்றும் தமிழ் மொழிமூல மாதிரி விண்ணப்பங்களில் பரீட்சையின் தலைப்பானது ஆங்கிலத்திலும் எழுதப்பட்டிருத்தல் வேண்டும்.

(ii) விண்ணப்பங்களானது "பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், பரீட்சைகள் திணைக்களம், ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைகள் கிளை, பெலவத்த, பத்தரமுல்லை" என்ற விலாசத்திற்கு 2010, திசெம்பர் 15 ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னர் கிடைக்கத்தக்கவாறு பதிவுத்தபால் மூலம் அனுப்பப்படல் வேண்டும். இத்திகதிக்குப் பின் பெறப்படும் எந்தவொரு விண்ணப்பப்படிவங்களும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. விண்ணப்பப்படிவம் வைத்து அனுப்பப்படும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் பரீட்சையின் பெயர் தெளிவாக குறிப்பிடப்படல் வேண்டும்.

(iii) பரீட்சைக் கட்டணமாக ரூபா 400 இனை ஏதாவது மாவட்ட/பிரதேச செயலக அலுவலகத்தில், பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் 2003-02-13 ஆம் இலக்க வருமான தலைப்பின் கீழ் வரவு வைப்பதற்காக செலுத்தப்படலாம். பற்றுச்சீட்டானது விண்ணப்பத்துடன் இணைக்கப்பட வேண்டியதுடன் விண்ணப்பதாரர்கள் பற்றுச்சீட்டின் படப்பிரதியொன்றினை தம்மிடம் வைத்துக்கொள்ள ஆலோசனை வழங்கப்படுகின்றது. இக்கட்டணமானது எச்சந்தர்ப்பத்திலும் மீளச் செலுத்தப்படமாட்டாது.

(iv) அரசாங்க திணைக்களங்களில் அல்லது சபைகளில் அல்லது கூட்டுத்தாபனங்களில் சேவையாற்றும் விண்ணப்பதாரிகள், தற்போது தாங்கள் சேவையாற்றும் திணைக்களங்கள் அல்லது நிறுவனங்களின் தலைவர்களினூடாக தங்களது விண்ணப்பங்களை அனுப்பிவைத்தல் வேண்டும். விண்ணப்பதாரிகள் தங்கள் விண்ணப்பங்களை 2010.12.15 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினை சென்றடைய வேண்டுமென்ற வேண்டுகோளுடன் தங்கள் விண்ணப்பங்களை தங்கள் திணைக்கள அல்லது நிறுவனங்களின் தலைவர்களுக்கு அனுப்பிவைத்தல் வேண்டும்.

விண்ணப்பங்கள் தனிப்பட்ட முறையில் சுங்கப் பணிப்பாளர் நாயகத்திற்கோ அல்லது திணைக்களத்தைச் சேர்ந்த வேறு எவரேனும் உத்தியோகத்தருக்கோ அனுப்பப்படலாகாது. இத்திகதிக்குப் பின்னர் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவை அத்திணைக்களங்களுக்கூடாக அனுப்பப்பட்டாலும் கூட அவைகள் நிராகரிக்கப்படும்.

அரசாங்க சேவையிலுள்ள விண்ணப்பதாரர்களது விண்ணப்பத்தில் திணைக்களத் தலைவர்/நிறுவனத் தலைவர் விண்ணப்பதாரரது கையொப்பத்தினை உறுதிப்படுத்தி அவரது கையொப்பம், அலுவலக முத்திரை என்பன இடப்படாதவிடத்து அத்தகைய விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

(v) *உறுதிப்படுத்துதல்.-* அரசாங்க சேவையிலுள்ள ஒரு விண்ணப்ப தாரியின் கையொப்பமானது அவரது திணைக்களத் தலைவரினால் அல்லது அவரது சார்பில் அதிகாரப்படுத்தப்பட்ட அலுவலர் ஒருவரினால் உறுதிப் படுத்தப்படல் வேண்டும்.

ஏனைய விண்ணப்பதாரரின் கையொப்பங்கள் அதிகார மளிக்கப்பட்ட ஒருவரினால் உறுதிப்படுத்தப்படல் வேண்டும். அதாவது சமாதான நீதவான், சத்தியப்பிரமாண ஆணையாளர், வழக்கறிஞர், பிரசித்த நொத்தாரிசு, அரசாங்க பாடசாலை அதிபர் அல்லது பணிப்பாளர் நிர்வகிக்கப்படும் பாடசாலை, கடற்படை, வான்படை அல்லது தரைப்படை அதிகாரமுடைய அதிகாரி, ரூபா 2,40,360 அல்லது அதற்குமேல் வருடாந்த சம்பளமுள்ள நிரந்தர அரசாங்க அலுவலர், பௌத்த ஆலயமொன்றின் பிரதம குரு அல்லது உயர்மத குரு அல்லது ஏதாவது வழிபாட்டுத்தலமொன்றுக்கு பொறுப்பாகவுள்ள அல்லது முக்கிய பதவி வகிக்கப்படுவர்.

8. **பரீட்சைக்கு அனுமதியளித்தல்.-** விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்பட்ட சகல விண்ணப்பதாரிகளுக்கும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அனுமதி அட்டைகளை அனுப்புவார். பரீட்சைகளுக்கென தோற்றும் பரீட்சார்த்திகள் பரீட்சை மண்டப மேற்பார்வையாளரிடம் கையொப்பத்தினை அத்தாட்சிப்படுத்தப்பட்ட தமது அனுமதி அட்டைகளை சமர்ப்பித்தல் வேண்டும். அனுமதி அட்டையை சமர்ப்பிக்கத் தவறும் பரீட்சார்த்திகள் பரீட்சைக்குத் தோற்ற அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

பரீட்சார்த்தி அவரவர்க்கென ஒதுக்கப்பட்ட பரீட்சை மண்டபத்தி லேயே பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும். தமக்கென ஒதுக்கப்படாத பரீட்சை மண்டபத்துக்கு செல்லும் பரீட்சார்த்திகளுக்கு அனுமதி வழங்கப்பட மாட்டாது. பரீட்சைக்குத் தோற்றும் ஒவ்வொரு பரீட்சார்த்தியும், பரீட்சை ஆரம்பமாகும் நாளன்று பரீட்சை மேற்பார்வையாளரிடம் தமது அனுமதி அட்டையினை கையளித்தல் வேண்டும்.

பரீட்சார்த்திகளுக்கான விதிகளும் ஒழுங்குவிதிகளும் இவ்வர்த்த மானியின் பகுதி I : தொகுதி II (அ) இல் வேறாக தரப்பட்டுள்ளன. இந்த விதிகளுக்கு பரீட்சார்த்திகள் கட்டுப்படுவர்.

பரீட்சார்த்திகளுக்கு அனுமதி அட்டை வழங்கியவுடன் அது தொடர்பாக பரீட்சைத் திணைக்களம் பத்திரிகை அறிவிப்பொன்றினை வெளியிடும். அவ் அறிவித்தல் வெளியாகி இரண்டு அல்லது மூன்று நாட்கள் சென்ற பின்னரும் அனுமதி அட்டை கிடைக்கப்பெறாவின் அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அது தொடர்பாக பரீட்சைத் திணைக்களத்திடம் அறிவித்தல் வேண்டும்.

விண்ணப்பப்படிவம் மற்றும் பணம் செலுத்திய பற்றுச்சீட்டு என்பவற்றில் உறுதிப்படுத்திய நிழற்பட பிரதிகள், பதிவுசெய்த பற்றுச்சீட்டு, கொழும்பின் வெளிப்பிரதேசமாயின் அனுமதி அட்டை அனுப்புவதற்காக பெக்ஸ் இலக்கம், குறிப்பிட்ட உங்களது கோரிக்கை கடிதம் என்பவற்றை தம்வசம் வைத்துக்கொண்டு பரீட்சைகள் திணைக்களத்திடம் அறிவித்தல் பயனுள்ளதாகும்.

9. **அடையாள அட்டைகள்.-** பரீட்சார்த்திகள் அவர்களது அடை யாளத்தினை நிரூபித்தல் வேண்டும். இந்நோக்கத்திற்காக பின்வரும் ஆவணங்களில் ஏதேனுமொன்று ஏற்றுக்கொள்ளப்படும் :-

(அ) ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களத்தினால் வழங்கப் பட்ட அடையாள அட்டை ;

(ஆ) பரீட்சைத் திகதிக்கு முன்பதாக ஐந்து ஆண்டுகளுக்கு மேற்படாது வழங்கப்பட்ட செல்லுபடியான கடவுச்சீட்டு.

மேற்கூறப்பட்டவாறான ஆவணமொன்றினை சமர்ப்பிக்கத் தவறும் பரீட்சார்த்தியின் பரீட்சார்த்தத் தன்மை பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் தற்றுணிபின் பெயரில் நிராகரிக்கப்படலாம்.

10. **தகைமை ஆவணங்கள்.-** (i) விண்ணப்பத்துடன், பரீட்சைக் கட்டணமாக செலுத்தப்பட்ட காசுக்கட்டளை தவிர்ந்த பிற ஆவணங்கள் எதுவும் விண்ணப்பத்துடன் அனுப்பப்படலாகாது. ஆனால் விதித் துரைக்கப்பட்டுள்ளதன் பிரகாரம் தேவையான விபரங்கள் விண்ணப்பத்தில் தரப்பட்டிருத்தல் வேண்டும். இந்த முறையில் சகல அம்சங்களிலும் பூர்த்திசெய்யப்படாத விண்ணப்பமானது அதன் தகுதிகளின் பெயரில் தீர்மானிக்கப்பட்டு நிராகரிக்கப்படலாம்.

(ii) நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படும் தகுதிபெற்ற பரீட்சார்த்தி கள் தமது தகைமைகளை நிரூபிப்பதற்கான ஆவணச்சான்றிதழ்களை சமர்ப்பித்தல் வேண்டும்.

(iii) பின்வரும் ஆவணங்களின் மூலப்பிரதிகள் தேவைப்படும்.

(iii) (அ) பொறுப்புள்ள ஆளொருவரினால் ஒப்பமிடப்பட்ட குணநலச் சான்றிதழ்.

**குறிப்பு.-** இத்தகைய குணநலச் சான்றிதழானது சமாதான நீதவான், வழங்கறிஞர், வதிவிட பிரதேச செயலாளர் அல்லது ஆண்டொற்றிற்கு ரூபா 2,40,360 அல்லது அதற்கு மேற்பட்ட தொகையை திரட்டிய சம்பளமாகப் பெறும் நிரந்தர அரசாங்க உத்தியோகத்தர் அல்லது பொதுவாக நன்கு தெரிந்தவர்கள் இலகுவாக சிபாரிசு பெற்றுக் கொள்ளக்கூடியதுமான ஒருவரால் பெறப்படலாம். இத்தகைய உறுதிப்படுத்துபவரது பெயர், பதவி, முகவரி என்பன சான்றுப் படுத்தலில் தெளிவாக குறிப்பிடல் வேண்டும்.

அரசாங்க சேவையில் நிரந்தர பதவி வகிக்கும் பரீட்சார்த்திகளின் விடயத்தில் அவர்கள் குணநலச் சான்றிதழ்களை சமர்ப்பிக்கும்படி கேட்கப்பட மாட்டார்கள்.

(iii) (ஆ) பரீட்சார்த்திகள் பிறப்புப் பதிவினது சான்றுப்படுத்தப்பட்ட ஒரு பிரதி அல்லது பதிவாளர் நாயகத்தினால் வழங்கப்பட்ட வயது பற்றிய ஒரு விசேட சான்றிதழ் (பிறப்பு பதிவுசெய்யப்படாத பரீட்சார்த்திகளது விடயத்தில்)

**குறிப்பு.-** (I) பாடசாலை அல்லது கல்வித் தேவைகளுக்கென வழங்கப்பட்ட விசேட பிறப்புச் சான்றிதழ் அல்லது பிறப்புப் பதிவிலிருந்து எடுக்கப்பட்ட சான்றுபடுத்தப்பட்டதொரு பிரதி என்பன ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

(II) பிறப்புச் சான்றிதழ்களுக்குப் பதிலாக நம்பிக்கை உறுதிப் பத்திரங்களோ அல்லது ஞானஸ்நான சான்றிதழ்களோ ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

பரீட்சார்த்தி சாதாரணமாக பயன்படுத்தும் பெயர் அல்லது பெயர்களிலிருந்து பிறப்புச் சான்றிதழில் உள்ள பெயர் அல்லது பெயர்கள் வேறுபடின் அல்லது பரீட்சைக்கு விண்ணப்பதாரி தோற்றும் பெயர் வேறுபடின் பிறப்புகள், இறப்புகள் பதிவுச் சட்டத்தின் (அத்தியாயம் 110) 27 ஆம், 28 ஆம் பிரிவுகளின் நியதிகளுக்கு அமைய பிறப்புப் பதிவிலுள்ள பெயரை திருத்துவதற்கான நடவடிக்கை உடனடியாக எடுக்கப்படல் வேண்டும்.

(iii) இலங்கைப் பிரசை என்ற பதிவுச்சான்றிதழ் அல்லது வம்சாவளிப் பிரசாவுரிமைக்கான கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்பட்ட மூல உத்தியோகபூர்வ கடிதம் (ஏற்புடையதாயின்)

(iv) கல்வித் தகைமை மூலச்சான்றிதழ்கள் அல்லது அத்தகைய சான்றிதழ்கள் வழங்கப்படாதவிடத்து ஏனைய உத்தியோகபூர்வ ஆவணங்கள்

(v) வலய/மாவட்ட/தேசிய விளையாட்டு போட்டிகளில் பெற்றுக் கொண்ட நிரூபண ஆவணம்

(vi) விண்ணப்பத்தினை அனுப்புகின்ற சமயத்தில் சகல தேவையான ஆவணங்களையும் தயாராக வைத்திருக்கும்படி பரீட்சார்த்திகள் கேட்கப்படுகின்றனர். தேவையான ஆவணங்களை சமர்ப்பிப்பதற்கு தவறுகின்ற அல்லது தேவையான சந்தர்ப்பத்தில் அவற்றைச் சமர்ப்பிப்பதில் தாமதங்களை ஏற்படுத்துகின்ற பரீட்சார்த்திகள் இப்பதவிக்கான நியமனத்திற்கு தகுதியற்றவர்களாவர்.

*11.* ***தவறான தகவல்களை சமர்ப்பிப்பதற்கான தண்டனை.***- இப்பரீட்சைக்கான ஒழுங்குவிதிகளின்படி எவரேனும் பரீட்சார்த்தி ஒருவர் அதற்குத் தோற்றுவதற்கு தகைமை அற்றவர் எனத் தெரியவருமாயின் பரீட்சையின் முன்னரோ அல்லது பரீட்சையின் போதோ அல்லது பரீட்சையின் பின்னரோ எச்சந்தர்ப்பத்திலும் அவருடைய பரீட்சார்த்தி உரிமை இரத்துச்செய்யப்படலாம்.

பரீட்சைக்கு விண்ணப்பதாரி ஒருவரினால் தரப்பட்டுள்ள விண்ணப்பங்கள் ஏதேனும் அவரது அறிவுக்கு எட்டியவரையில் தவறானவை என அல்லது வேண்டுமென்றே விபரங்களைத் தரவில்லையென காணப்படின் அல்லது அவரது சேவைக் காலத்தின் எக்காலப்பகுதியிலேனும் அவர் பரீட்சைக்குத் தோற்றும் தகைமையற்றவர் என நிரூபிக்கப்படின் அவர் சேவையிலிருந்து உடனடியாக நீக்கப்படுவார். இந்த அறிவித்தலில் தரப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கு இணக்கமாக இல்லாத விண்ணப்பதாரிகளின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

*12.* இந்த ஒழுங்குவிதிகளில் கவனிக்கப்படாத ஏதேனும் விடயம் சுங்கப் பணிப்பாளர் நாயகத்தின் தற்றுணிபின்படி கையாளப்படும்.

சுங்கப் பணிப்பாளர் நாயகம்.

இலங்கை சுங்கத் திணைக்களம்,
பிறிஸ்டல் வீதி,
கொழும்பு 1.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இலங்கை சுங்கத் திணைக்களத்தின் சுங்க பரிசோதகர் தரம் II ஆம் பதவிகளுக்கு ஆட்சேர்ப்பதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2010**

OPEN COMPETITIVE EXAMINATION FOR RECRUITMENT TO POSTS OF INSPECTOR OF CUSTOMS, GRADE II OF SRI LANKA CUSTOMS DEPARTMENT - 2010

[ ]
(அலுவலக பாவனைக்கு மாத்திரம்)

நீர் இப்பரீட்சையில் தோற்றுவதற்கான மொழிமூலம் :
சிங்களம் - 2
தமிழ் - 3 [ ]
ஆங்கிலம் - 4

(கூட்டினுள் பொருத்தமான இலக்கத்தை எழுதவும்)

*1.* விண்ணப்பதாரரின் பெயர் :----.

*1.1* முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்கள்) உதாரணம் :- SILVA, B.A :----.

*1.2* முதலெழுத்துக்களுடன் பெயர் (தமிழ்/சிங்களம்) :----.

*1.3* முதலெழுத்துக்களால் குறிக்கும் பெயர்கள் (ஆங்கிலம்) பெரிய எழுத்துக்களில்) :----.

சிங்களம்/தமிழில் :----.

*2.* நிரந்தர வதிவிட விலாசம் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :----.

அனுமதி அட்டை அனுப்புவதற்கான விலாசம் :----.

*3.* தேசிய அடையாள அட்டையினது விபரங்கள் :----.

*3.1* தேசிய அடையாள அட்டை இலக்கம் :

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

*3.2* வழங்கப்பட்ட திகதி :- [ ]

*4.* பால் :
ஆண் - *0*
பெண் - *1* [ ]

(கூட்டினுள் பொருத்தமான இலக்கத்தை எழுதவும்)

*5.* நீங்கள் இலங்கைப் பிரஜையா இல்லையா என்பதைக் குறிப்பிடவும் :-

வம்சாவழி மூலம் - *1*
பதிவு மூலம் - *2* [ ]

(கூட்டினுள் பொருத்தமான இலக்கத்தை எழுதவும்)

*6.* இனம் :
சிங்களம்-*1*, இலங்கைத் தமிழ்-*2*, இந்தியத் தமிழ்-*3*, முஸ்லிம்-*4*, பறங்கியர்-*5*, ஏனையோர்-*6* [ ]

(கூட்டினுள் பொருத்தமான இலக்கத்தை எழுதவும்)

*7.* (அ) பிறந்த திகதி :

| ஆண்டு | | | | மாதம் | | திகதி | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | |

(ஆ) விண்ணப்பம் முடிவுத் திகதியன்று வயது :

| வருடங்கள் | | மாதங்கள் | | நாட்கள் | |
|---|---|---|---|---|---|
| | | | | | |

*8.* உடற்தகைமை தேவைப்பாடுகள் :

(i) உயரம் : .......... அடி .......... அங்குலம்

(ii) மார்புச் சுற்றளவு (விரிவடைந்த நிலையில்) : ............ அங்குலங்கள்
(ஆண் விண்ணப்பதாரர்களுக்கு மாத்திரம்)

*9.* நீர் ஏதாவது குற்றச்செயலுக்காக எப்பொழுதாவது நீதிமன்ற தண்டனை அனுபவித்துள்ளீரா ? (ஆம்/இல்லை) :----.

ஆம் எனில், விபரங்களைக் குறிப்பிடவும் :----.

10. கல்வித் தகைமைகள் :

(i) ஒரே தடவையில் பெறப்பட்ட கல்விப் பொதுத்தராதர (உயர் தர) சான்றிதழ் பெறுபேறு :

பரீட்சையினது வருடம் :----.
சுட்டெண் :----.

| பாடங்கள் | பெறுபேறு | பாடங்கள் | பெறுபேறு |
|---|---|---|---|
| | | | |

(ii) கல்விப் பொதுத்தராதர (சாதாரண தர) சான்றிதழ் :

| பாடங்கள் | பெறுபேறு | வருடம் | சுட்டெண் |
|---|---|---|---|
| | | | |

(iii) கல்விப் பொதுத்தராதர (சாதாரண தர) பரீட்சையில் ஆங்கில மொழியில் சாதாரண சித்தியினை பெற்றுள்ளீரா ? (ஆம்/இல்லை) [ ]

11. பரீட்சைக் கட்டணம் (பற்றுச்சீட்டு இணைக்கப்படல் வேண்டும்) :

| |
|---|
| மாவட்ட/பிரதேச செயலாளர் அலுவலகம் : |
| பற்றுச்சீட்டு இலக்கம் : |
| திகதி : |

(இந்த விபரங்கள் கட்டாயமாக கொடுக்கப்படல் வேண்டும்.)

12. **விண்ணப்பதாரியின் உறுதியுரை/சான்றுப்படுத்தல்.**- இவ்விண்ணப்பத்தில் என்னால் தரப்பட்டுள்ள விபரங்கள் யாவும் உண்மையானவை எனவும், சரியானவை எனவும் இத்தால் உறுதிமொழிகிறேன். இவற்றில் அடங்கியுள்ள விபரங்களில் ஏதேனும் பொய்யானவை அல்லது தவறானவை எனக் காணப்படின் தெரிவுக்கு முன்னராயின் தகைமை நீக்கம் செய்யப்படுவதற்கும் அல்லது தெரிவின் பின்னராயின் பதவி நீக்கம் செய்யப்படுவதற்கும் ஆளாவேன். மேலும் பரீட்சை நடத்துதல் தொடர்பில் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினது சட்டவிதிகளுக்கமைய நான் நடந்துகொள்வேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

13. **விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல் (பொருத்தமற்றதை வெட்டிவிடவும்.) :**

இவ்விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கும் திரு./திருமதி/செல்வி ............................... என்பவரை எனக்கு தனிப்பட்ட முறையில் தெரியும். இத்திணைக்களத்தில்/சபையில்/கூட்டுத்தாபனத்தில் கடமையாற்றுபவராக இருக்கின்றார் என்றும் அவரது கையொப்பம் எனது முன்னிலையில் 2010, .................. ஆந் திகதி இடப்பட்டது என நான் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

சுங்க பரிசோதகர் தரம்-II நியமனத்துக்காக அவர் தெரிசெய்யப்படின் இத்திணைக்களத்திலிருந்து/சபையிலிருந்து/கூட்டுத் தாபனத்திலிருந்து அவரை விடுவிக்க முடியும்/முடியாது.

----,
உறுதிப்படுத்துவரது கையொப்பம்.

உறுதிப்படுத்துபவரது முழுப்பெயர் :----.
பதவி :----.
விலாசம் :----.
திகதி :----.

***குறிப்பு.***- வர்த்தமான பத்திரிகையின் 7 (V) ஆம் பந்தியில் குறிப்பிட்டதொரு நபரினால் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

11-367

---

## இலங்கை கால்நடை உற்பத்தி சுகாதார சேவை உத்தியோகத்தர்களுக்கான வினைத்திறன்காண் தடைப் பரீட்சை – 2009 (2010)

மேலே குறிப்பிடப்பட்ட சேவையில் உள்ள அலுவலர்களுக்கான வினைத்திறன்காண் தடைப்பரீட்சை 2011 ஆம் ஆண்டு மாசி மாத ஆரம்பத்தில் பேராதனையில் நடத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது என இத்தால் அறிவிக்கப்படுகின்றது. இதன் பொருட்டு 2010 ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 1 ஆந் திகதிக்கு கால்நடை உற்பத்தி சுகாதார சேவையில் உள்ள அலுவலர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. வினைத்திறமைகாண் தடைப்பரீட்சைகள் இரண்டுக்கும் ஒரே முறையில் தோற்றக்கூடியதாக நேர அட்டவணைகள் தயாரிக்கப்படும்.

3. **பாடவிதானம்.**- முதலாம், இரண்டாம் வினைத்திறமைகாண் தடைப்பரீட்சைக்கு பொருத்தமான பாடத்திட்டம் மற்றும் ஏனைய ஒழுங்குவிதிகள் அதன் சேவைப் பிரமாணக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. இலங்கை கால்நடை உற்பத்தி சுகாதார சேவையில் உள்ள அலுவலர்களுக்கான I ஆவது வினைத்திறமைகாண் தடைப் பரீட்சைக்கான பாடத்திட்டம் இணைப்பு 'அ' விலும் II ஆவது வினைத்திறன்காண் தடைப்பரீட்சைக்கான பாடத்திட்டம் இணைப்பு 'ஆ' விலும் குறிப்பிடப்பட்டுள்ளன.

வினைத்திறன்காண் பரீட்சைகளின்போது பாடங்களுக்கு அமர்கையில் ஒரே தடவையிலோ அல்லது அதற்கு மேற்பட்ட அமர்வுகளிலோ தோற்ற முடியும்.

4. இச்சேவையில் உள்ள அலுவலர்கள் வினைத்திறன்காண் தடைப்பரீட்சைக்கு தோற்ற வேண்டிய பாடங்கள் பின்வருமாறு :

**இலங்கை கால்நடை உற்பத்தி சுகாதார சேவை**

| 1 ஆவது வினைத்திறன்காண் தடைப்பரீட்சை | | | 2 ஆவது வினைத்திறன்காண் தடைப்பரீட்சை | | |
|---|---|---|---|---|---|
| தொடர் இல. | விடயம் | நேரம் (மணி) | தொடர் இல. | விடயம் | நேரம் (மணி) |
| 01 | நிதி முறைமைகள் | 03 | 01 | 1 ஆம் பகுதி | 03 |
| 02 | நிருவாகம் | 03 | 02 | 2 ஆம் பகுதி | 03 |
| 03 | திணைக்கள பிரமாணம் வினாப் பத்திரம் - I | 02 | 03 | 3 ஆம் பகுதி-வினாப்பத்திரம் I | 03 |
| 04 | திணைக்களப் பிரமாணம் வினாப் பத்திரம் - II | 03 | 04 | 3 ஆம் பகுதி-வினாப்பத்திரம் II | 03 |
| 05 | விசேட வினாப்பத்திரம்* | 03 | 05 | 3 ஆம் பகுதி-வினாப்பத்திரம் III | 03 |
| | | | 06 | 3 ஆம் பகுதி-வினாப்பத்திரம் IV | 03 |
| | | | 07 | 3 ஆம் பகுதி-வினாப்பத்திரம் V | 03 |
| | | | 08 | 3 ஆம் பகுதி-வினாப்பத்திரம் VI | 03 |
| | | | 09 | 3 ஆம் பகுதி-வினாப்பத்திரம் VII | 03 |
| | | | 10 | 3 ஆம் பகுதி-வினாப்பத்திரம்VIII | 03 |
| | | | 11 | 3 ஆம் பகுதி-வினாப்பத்திரம் IX | 03 |
| | | | 12 | 3 ஆம் பகுதி-வினாப்பத்திரம் X | 03 |
| | | | 13 | 3 ஆம் பகுதி-வினாப்பத்திரம் XI | 03 |

*இதன் பொருட்டு கால்நடை ஆராய்ச்சி உத்தியோகத்தர்கள் மட்டும் விண்ணப்பிக்கவும்.

**குறிப்பு**.- இரண்டாவது வினைத்திறன்காண் பரீட்சை விண்ணப்பதாரிகள் அமரவேண்டியது பகுதி - 1 அல்லது பகுதி - 2 வினாப்பத்திரம் இரண்டில் ஒன்றுக்கும் மற்றும் பகுதி 3 இல் குறிப்பிடப்பட்டுள்ள XI வினாப்பத்திரங்களில் இருந்து இரு வினாப்பத்திரங்களுக்கு மட்டும் அமரல் வேண்டும். சித்தி எய்துவதன் பொருட்டு ஒவ்வொரு வினாப்பத்திரத்திலும் ஆகக்குறைந்தது 40% புள்ளிகளை பெறுதல் வேண்டும்.)

5. கீழே தரப்பட்டுள்ள 1966.09.04 ஆந் திகதியுடையதும் 701 ஆம் இலக்கத்தைக் கொண்டதுமான திறைசேரி சுற்றறிக்கையின் 5 ஆம் பந்தியைக் கவனிக்குமாறு இவ்வினைத்திறன்காண் தடைப் பரீட்சைகளுக்குத் தோற்றும் உத்தியோகத்தர்கள் வேண்டப்படுகின்றனர்.

திணைக்களப் பரீட்சை (பதவி உயர்வு மற்றும் வினைத்திறன்காண் தடைப் பரீட்சை உட்பட) பரீட்சைக்கு தோற்றும் மொழி உத்தியோகத்தர் அரச சேவையில் சேர்வதற்கு தோற்றிய போட்டிப் பரீட்சையின் மொழியிலாகும் அல்லது அரச கரும மொழியிலாகும். போட்டிப் பரீட்சை இல்லாமல் நேரடியாக சேவைக்கு சேர்ந்தவர்கள் விடயத்தில் பதவி உயர்வுக்கு அல்லது வினைத்திறன்காண் தடைப்பரீட்சைக்கான மொழியாக இருக்கவேண்டியது உத்தியோகத்தர்கள் சேவையில் சேர்ந்து கொள்வதற்கு தகுதி பெற்ற அல்லது அரசகரும மொழியாகும்.

6. கீழே குறிப்பிடப்பட்டுள்ள வினாப்பத்திரங்களுக்கு சிங்களம், தமிழ் அல்லது ஆங்கிலத்தில் விடையளிக்க பரீட்சார்த்திகளுக்கு பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. விண்ணப்பம் செய்த மொழி மூலத்தை பின்னர் மாற்றம் செய்ய இயலாது :-

(i) நிதி முறைமைகள்;
(ii) நிர்வாகம்;
(iii) திணைக்களப் பிரமாணங்கள் I;
(iv) திணைக்களப் பிரமாணங்கள் II;

7. பரீட்சார்த்தி ஒருவர் தனக்கு உரித்தில்லாத மொழியில் பரீட்சைக்கு தோற்றியமை பின்னர் கண்டுபிடிக்கப்பட்டால் அவரது பரீட்சார்த்தித் தன்மை நீக்கப்படும்.

8. விண்ணப்பப்பத்திரங்கள் மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைய A4 தாளின் இருபக்கங்களிலும் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். **மேற்குறிப்பிடப்பட்ட இரு பரீட்சைகளுக்கும் தோற்றுவதாயின் வெவ்வேறாக ஒவ்வொரு பரீட்சையின் பொருட்டும் விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்**. விண்ணப்பப் படிவத்தில் தொடர் இலக்கம் 01 முதல் 08 வரை முதலாம் பக்கத்திலும் மீதி இரண்டாம் பக்கத்திலும் அமையுமாறும் தயாரிக்கப்படுதல் வேண்டும். அதற்கு உரிய தகவல்களை தமது சொந்த கையெழுத்தினால் மிகவும் தெளிவாக எழுதி நிரப்புதல் வேண்டும். மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு இயைய அமையாத விண்ணப்பங்களும் பூரணப்படுத்தாத விண்ணப்பங்களும் அறியத்தராமலேயே நிராகரிக்கப்படும். விண்ணப்பத்தின் ஒளிப்படப்பிரதி ஒன்றினை வைத்துக்கொள்ளவும். மேலும் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்கள் பரீட்சை அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட மாதிரி விண்ணப்பத்திற்கு அமைய அமைந்துள்ளதா என்பதனை சரிபார்த்துக்கொள்ள வேண்டியதுடன் அவ்வாறு அமையாதவிடத்து நிராகரிக்கப்படும். விண்ணப்பங்கள் தயார்படுத்துகையில் அங்கு தலைப்பிலுள்ள பரீட்சையின் பெயர் சிங்கள விண்ணப்பங்களில் சிங்களத்திலும் ஆங்கிலத்திலும், தமிழ் விண்ணப்பங்களில் அதன் தலைப்பு தமிழிழும் ஆங்கிலத்திலும் குறிப்பிடுதல் வேண்டும்.

9. இப்பரீட்சை பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படும். பரீட்சார்த்திகள் அவரால் விதிக்கப்படும் பரீட்சை விதிகளுக்கும் பிரமாணங்களுக்கும் கட்டுப்பட்டவராவார். இவ்விதிகளும் பிரமாணங்களும் இவ்வர்த்தமானியின் தொடக்கத்தில் வெளியிடப்பட்டுள்ளன. பரீட்சை நடாத்துவது தொடர்பில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்பட்டுள்ள ஒழுங்கு விதிகளுக்கு பரீட்சார்த்திகள் கீழ்ப்படிய வேண்டும். அவ்வொழுங்கு விதிகளை பின்பற்றாதவிடத்து பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் வழங்கப்படும் தண்டனைக்கு அவர் உட்படுவர்.

10. விண்ணப்பப்பத்திரங்கள் 2010, கார்த்திகை 26 ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ கால்நடை உற்பத்தி சுகாதார பணிப்பாளர் நாயகத்திற்கு கிடைக்கக்கூடியதாக கீழே குறிப்பிடப்பட்ட முகவரிக்கு திணைக்களத் தலைவரினூடாக பதிவுத்தபாலில் அனுப்புதல் வேண்டும். இத்தினத்திற்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் யாவும் நிராகரிக்கப்படும்:

கால்நடை உற்பத்தி சுகாதாரப் பணிப்பாளர் நாயகம்,
கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம்,
கெட்டம்பே, பேராதனை.

11. விண்ணப்பகாரருக்கு அனுமதி அட்டை அனுப்பப்பட்டவுடனே அது தொடர்பில் குறிப்பிட்டு பத்திரிகை அறிவித்தல் ஒன்று பரீட்சை திணைக்களத்தினால் வெளியிடப்படும். அறிவித்தல் வெளியிடப்பட்ட 2 அல்லது 3 நாட்கள் சென்றும் அனுமதி அட்டை கிடைக்காதவிடத்து அறிவித்தலில் குறிப்பிடப்பட்டதற்கு அமைய அது தொடர்பில் கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களத்திற்கு அறியக் கொடுத்தல் வேண்டும். நீங்கள் வைத்திருக்கும் விண்ணப்பத்தின் ஒளிப்படப்பிரதி மற்றும் பணம் செலுத்திய பற்றுச்சீட்டின் சான்றுப்படுத்தப்பட்ட ஒளிப்படப்பிரதி மற்றும் பதிவுத் தபால் இட்ட பற்றுச்சீட்டுடன் கொழும்பிற்கு வெளியே வசிப்பவராயின் அனுமதிப்பத்திரத்தை அனுப்பும் பொருட்டு தொலைநகல் இலக்கம் ஒன்றினைக் குறிப்பிட்டு உங்களது வேண்டுகோள் கடிதத்துடன் கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்திற்கு அறியக்கொடுப்பது சிறந்ததாகும்.

12. மேலே 11 ஆம் பந்தியில் கூறப்பட்டுள்ளவாறான தேவைகளைப் பூர்த்தி செய்யத் தவறும் பரீட்சார்த்திகளால் பின் சமர்ப்பிக்கப்படும் எழுத்துமூலமான கடிதத் தொடர்புகள் எதுவும் கவனத்திற் கொள்ளப்படமாட்டாது.

13. அடையாள அட்டை சம்பந்தமாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விடுக்கப்பட்ட 1971, யூன் மாதம் 29 ஆந் திகதியிடப்பட்டதும் எஸ்.ஈ. 274 ஆம் இலக்கத்தைக் கொண்ட சுற்றறிக்கை பரீட்சார்த்திகள் அனைவரினதும் கவனத்திற்கு கொண்டுவரப்படுகின்றது. பரீட்சை மண்டபத்தில் தமது ஆளடையாளத்தை நிரூபிப்பது பரீட்சார்த்திகளின் பொறுப்பாகும். இலங்கை பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்படும் பரீட்சைகளின்போது பரீட்சார்த்திகளின் ஆளடையாளத்தை பரீட்சை மண்டப பொறுப்பாளர் உறுதி செய்து கொள்ளும் பொருட்டு ஏற்றுக்கொள்ளப்படுவது ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்படும் தேசிய ஆளடையாள அட்டை அல்லது ஏற்றுக்கொள்ளப்பட்ட கடவுச்சீட்டு மாத்திரமேயாகும்.

14. இப்பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்திகளிடம் இருந்து பின்வரும் அடிப்படையில் கட்டணங்கள் அறவிடப்படவுள்ளது :

(அ) முதல் அமர்வு, முழுப்பரீட்சை அல்லது ஒரு பகுதிக்கு கட்டணம் அறவிடப்படமாட்டாது.

(ஆ) இதன் பின் ஒவ்வொரு அமர்வுக்குமாக-

| | |
|---|---|
| முழுப் பரீட்சை | - ரூபா 400.00 |
| ஒரு பாடம் | - ரூபா 200.00 |

இப்பரீட்சைக்கு ஏற்கனவே தோற்றியுள்ள பரீட்சார்த்திகள் மேலே குறிப்பிடப்பட்டுள்ளவாறு பொருத்தமான கட்டணங்களைச் செலுத்துமாறு வேண்டப்படுகின்றார்கள். இப்பரீட்சைக் கட்டணம் கால்நடை உற்பத்தி சுகாதார பணிப்பாளரது வருமான தலைப்பு 292-1-1-2401 இற்கு செலவு வைக்குமாறு தீவில் அமையப்பெற்றுள்ள எந்தவொரு தபால் பணிமனையிலும்/மாவட்ட அல்லது பிரதேச செயலாளர் பணிமனையில் செலுத்தி பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டினை விண்ணப்பத்தில் உரிய கூட்டில் கழறாதவாறு ஒட்டவும். மேலும் அதன் ஒளிப்படப் பிரதியை வைத்திருப்பதானது பயன்மிக்கதாகும்.

15. விண்ணப்பக்காரர் ஒருவருக்கு அனுமதி அட்டை ஒன்று வழங்கப்படுவதானது அவர் பரீட்சைக்குத் தோற்ற தகைமை கொண்டுள்ளார் என கருதப்படலாகாது.

ஏ. எச். கமகே,
செயலாளர்,
கால்நடை வள மற்றும் கிராமிய சமூக அபிவிருத்தி அமைச்சு.

கால்நடை வள மற்றும் கிராமிய சமூக அபிவிருத்தி அமைச்சு ,
இல. 45, புனித மைக்கல் வீதி,
கொழும்பு 03,
2010, ஒற்றோபர்

மாதிரி விண்ணப்பப்படிவம்

**பரீட்சைத் திணைக்களம் - இலங்கை**

*இலங்கை கால்நடை உற்பத்தி சுகாதார சேவை உத்தியோகத்தர்களுக்கான*
*வினைத்திறன்காண் தடைப்பரீட்சை – 2009 (2010)*
*Efficiency Bar Examination for the Officers of the Sri Lanka Animal Production and Health Service - 2009 (2010)*

(கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் 'பரீட்சையின் பெயர்' எழுதப்பட்டிருத்தல் வேண்டும்.)
(வினைத்திறன்காண் தடைப்பரீட்சை இரண்டிற்கும் ஒரே தடவையில் அமர்வதாயின் விண்ணப்பங்கள் 02 அனுப்புதல் வேண்டும்.)

உத்தியோகத்தர் பரீட்சைக்கு தோற்றும் மொழிமூலம் சிங்களம் - 2
தமிழ் - 3
ஆங்கிலம் - 4 ☐
(உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதுக)

உத்தியோகத்தர் விண்ணப்பிக்கும் பரீட்சை
முதலாவது வினைத்திறன்காண் தடைப்பரீட்சை - 1
முதலாவது வினைத்திறன்காண் தடைப்பரீட்சை - 2 ☐
(உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதுக)

1. (அ) முதலெழுத்துக்கள் இறுதியில் வருமாறு முதலெழுத்துக்களுடன் பெயர் :----.
(உதாரணம் : Nimalsiri, K. A)
(ஆ) முதலெழுத்துக்கள் குறிக்கும் பெயர் :----.

2. பிறந்த திகதி :- ஆண்டு ☐☐☐☐ மாதம் ☐☐ திகதி ☐☐

3. பதவிப் பெயர் :----.
திணைக்களத்தின் பெயர் :----.

4. தபால் முகவரி (அனுமதி அட்டை அனுப்பப்படுவதற்காக) :----.

5. இலங்கை கால்நடை உற்பத்தி சுகாதார சேவைக்கு நியமனம் பெற்ற திகதி :----.

6. அறிவித்தலின் நான்காவது பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள பாட எண்களுடன் தோற்றும் பாடங்கள் (தெளிவாக குறிப்பிடப்படுதல் வேண்டும்) :-

(i) பாட எண் ☐☐ பாடம் ..............
(ii) பாட எண் ☐☐ பாடம் ..............
(iii) பாட எண் ☐☐ பாடம் ..............
(iv) பாட எண் ☐☐ பாடம் ..............
(v) பாட எண் ☐☐ பாடம் ..............

7. இதற்கு முன்னர் முழுதாக அல்லது பகுதியாக இப்பரீட்சைக்குத் தோற்றியுள்ளீரா என்பதைக் குறிப்பிடுக. அவ்வாறு தோற்றியிருப்பின் பாடங்களையும் ஆண்டையும் மாதத்தையும் தருக :----.

8. தேசிய அடையாள அட்டை இலக்கம் : ☐☐☐☐☐☐☐☐☐☐

மேற்குறிப்பிடப்பட்ட விடயங்கள் சரியானது எனவும், விண்ணப்பத்தில் மேலே குறிப்பிடப்பட்டுள்ள மொழி மூலத்தில் இப்பரீட்சைக்கு தோற்ற உரிமையுள்ளது எனவும், இவ்விண்ணப்பத்தில் ஒட்டப்பட்டுள்ள முத்திரை என்னால் செல்லுபடியற்றதாக்குவதற்கு முன் பயன்படுத்தப்படவில்லை எனவும், பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் பரீட்சை ஒழுங்கு விதிகளுக்கு கட்டுப்படுவேன் எனவும் இத்தால் உறுதி மொழிகின்றேன்.

9. செலுத்தப்பட்ட பரீட்சைக் கட்டணம் ரூபா :----.

| பற்றுச்சீட்டினை ஒட்டுவதற்காக<br>(பற்றுச்சீட்டின் ஒளிப்பிரதியை வைத்துக்கொள்ளவும்.) |
|---|

----,
திகதி :----. விண்ணப்பக்காரரின் கையொப்பம்.

**கால்நடை உற்பத்தி சுகாதாரப் பணிப்பாளர் நாயகத்தினூடாக பரீட்சை ஆணையாளர் நாயகத்திற்கு சமர்ப்பித்தல் :**

இதனகத்துக் காணப்படும் விபரங்களையுடைய பரீட்சார்த்தி பரீட்சைக்குத் தோற்ற தகைமையுடையவரென்றும், குறிப்பிடப்பட்ட மொழிமூலத்தில் இப்பரீட்சைக்கு தோற்றுவதற்கு இவ்விண்ணப்பதாரிக்கு தகைமையுள்ளது எனவும் விண்ணப்பதாரர் முத்திரை/முத்திரைகளை முறையாக ஒட்டி பெறுமதி நீக்கம் செய்துள்ளார் எனவும் பரீட்சார்த்தியினால் கையொப்பம் இடப்பட்டது எனவும் நான் அத்தாட்சிப்படுத்துகின்றேன்.

----,
திணைக்களத் தலைவரின் கையொப்பமும்
பதவிப்பெயரும்.

திகதி :----.
(*கட்டணம் செலுத்தாதவிடத்து வெட்டிவிடவும்)

***பின்னிணைப்பு "அ"***

இலங்கை கால்நடைவள உற்பத்தி சுகாதார சேவையிலுள்ள அலுவலர்களுக்கான முதலாம் வினைத்திறன்காண் தடைப் பரீட்சைகளின்போது பின்வரும் பாடங்களில் சித்தி அடைதல் வேண்டும் .-

(1) நிதி முறை
(2) நிர்வாகம்
(3) திணைக்களப் பிரமாணங்கள் I
(4) திணைக்களப் பிரமாணங்கள் II

(1) நிதி முறை.- நிதி என்னும் பாடத்திலான பரீட்சை பின்வருவனவற்றை அடிப்படையாகக் கொண்டிருக்கும் :

(அ) இலங்கை அரசாங்க நிதி ஒழுங்குவிதி பகுதி I (X ஆம் அத்தியாயம் தவிர)
(ஆ) நடப்பாண்டு மதிப்பீடுகள்.- (உதாரணம் :- வருமானத் தலைப்பு தயாரித்தல், அரசிறை தலைப்புகள், நிதி ஒதுக்கீட்டுச் சட்டங்கள்)
(இ) கச்சேரிகளினூடாக விசேடமாக மேற்கொள்ளப்படும் கணக்குகள் சட்டம்

**குறிப்பு**.- பரீட்சார்த்திகள் சித்திபெறுவதற்கு மொத்தப் புள்ளிகளில் 40 சதவீதத்தைப் பெறுதல் வேண்டும்.

(2) நிர்வாகம்.- நிர்வாகம் என்னும் பாடத்திலான பரீட்சை பின்வருவனவற்றை அடிப்படையாகக் கொண்டிருக்கும் :

(அ) அலுவலக மற்றும் துறைகளை ஒழுங்குபடுத்தும் முறைமைகள்
(ஆ) தாபன விதிக் கோவை அத்தியாயம் I, II, III, V, VI, VII, IX, XXIII, XXV, XXVI, XXVII, XXVIII, XXIX, XXX, XXXI, XXXII, XXXIII, XLVII, XLVIII.

**குறிப்பு**.- பரீட்சார்த்திகள் சித்திபெறுவதற்கு மொத்தப் புள்ளிகளில் 40 சதவீதத்தைப் பெறுதல் வேண்டும்.

(3) திணைக்களப் பிரமாணங்கள் I.- திணைக்களப் பிரமாணம் என்னும் பாடத்திலான பரீட்சை பின்வருவனவற்றை அடிப்படையாகக் கொண்டிருக்கும். இப்பரீட்சை வினாத்தாள் பின்வரும் விடயங்களை உள்ளடக்கிய இரண்டு மணித்தியால வினாப்பத்திரமாகும்.

ஸ்பரிசத்துடன் தொற்றிப் பரவும் தொற்று நோய்க்கான சட்டம் மற்றும் திணைக்கள கட்டளை கால்நடை வைத்திய சேவைக்கு பொருத்தமான சுற்றுநிருபங்கள்.

**குறிப்பு**.- பரீட்சார்த்திகள் சித்திபெறுவதற்கு மொத்தப் புள்ளிகளில் 40 சதவீதத்தைப் பெறுதல் வேண்டும்.

4. திணைக்களப் பிரமாணங்கள் II.- திணைக்களப் பிரமாணம் என்னும் பாடத்திலான பரீட்சை பின்வருவனவற்றை அடிப்படையாகக் கொண்டிருக்கும் :-

(அ) மாதிரிகளை அனுப்புதல், பிரேத பரிசோதனை உள்ளிட்ட நோய் ஆய்வுகூட பரிசோதனை முறைகள், கர்ப்ப பரிசோதனை உள்ளிட்ட இனங்காணும் பரிசோதனை, வெளிக்கள நோய் ஆய்வு உறுதி பரிசோதனை விலங்குகளுக்கு ஏற்படும் தொற்று நோய்களுக்கு எதிரான தடுப்பு மருந்து, குருதி பாயம் (Sera) ஆகிய முற்காப்பு நடவடிக்கைகள் ;

(ஆ) செயற்கை முறைச் சினைப்படுத்தல் செயல்முறையும் தொழிநுட்பமும், இனப்பெருக்கத்தின் அடிப்படைத் தத்துவங்களும் கன்று வளர்ப்பும், அடைகாத்தல், குஞ்சு பொரித்தல், கோழிக்குஞ்சு வளர்ப்பு, கால்நடைகளுக்கான போசணை, உணவுப் பண்டம், பசுந்தீவனப் பயிர்ச்செய்கை, வெவ்வேறுபட்ட பயிர்கள், புற்செய்கை, உலர்புல், சைலேஜ் தயாரிப்பு, கல்நடைப் பராமரிப்பு என்பன;

(இ) பால் உற்பத்தி, கிருமியழிக்கப்பட்ட பாலை போத்தல்களில் அடைத்து எடுத்துச் செல்லல், பால் சுகாதாரம், பாதுகாப்பு, பால் ஆடை பகுத்தல் உள்ளடங்கலாக பரிசீலனை செய்தல், பால் ஆடை நீக்கல், பட்டர் நெய் மற்றும் தயிர் உற்பத்தி

**குறிப்பு**.- பரீட்சார்த்திகள் சித்திபெறுவதற்கு மொத்தப் புள்ளிகளில் 40 சதவீதத்தைப் பெறுதல் வேண்டும்.

## பின்னிணைப்பு "ஆ"

(அ) இலங்கை கால்நடைவள உற்பத்தி சுகாதார சேவையில் உள்ள அலுவலர்களுக்கான II ஆவது வினைத்திறன்காண் தடைப்பரீட்சையின்போது பின்வரும் பாடங்களில் சித்தியடைதல் வேண்டும் :-

பகுதி I – பின்வரும் பிரிவுகளில் இதற்கான பாடத்திட்டம் சேர்க்கப்பட்டிருக்கும் :-
2.1, 2.2, 4.1, 4.2, 5.2, 5.8, 6.5, 7.2.1, 8.2, 8.2.2, 8.2.3, 8.3.1, 9.2, 9.4, 9.6, 9.7 பகுதிகளில் உள்ளடக்கப்பட்டிருக்கும். இதற்குரிய விபரமான பாடத்திட்டம் பேராதனை கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களப் பணிப்பாளர் நாயகத்திடமும் மாகாண கால்நடை உற்பத்தி சுகாதார பணிப்பாளர்களிடமும் பெற்றுக்கொள்ளலாம்.

பகுதி II – பின்வரும் பிரிவுகளில் இதற்கான பாடத்திட்டம் சேர்க்கப்பட்டிருக்கும் :-
1.1.1, 1.1.4, 1.2.1, 3.2, 3.1.1, 3.1.2, 3.2.1, 10.1.1, 10.1.2, 10.1.3, 10.1.4, 10.1.6, 10.2.1, 10.2.8, 10.4.1 பகுதிகளில் உள்ளடக்கப்பட்டிருக்கும். இதற்குரிய விபரமான பாடத்திட்டம் பேராதனை கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களப் பணிப்பாளர் நாயகத்திடமும் மாகாண கால்நடை உற்பத்தி சுகாதார பணிப்பாளர்களிடமும் பெற்றுக்கொள்ளலாம்.

பகுதி III – வினாத்தாள் :

1. தொற்றுநோயியல்
2. கால்நடைப் பொருளியல்
3. மிருக வைத்திய பொதுச் சுகாதாரம்
4. விவசாய விஸ்தரிப்பு
5. பரம்பரையியல் சினைப்படுத்தல்
6. விலங்கு உடற்றொழிலியலும் இனப்பெருக்கமும்
7. வீடமைப்பு முகாமைத்துவம்
8. விலங்குப் போசணை
9. பசும்புல் மற்றும் விலங்கு தீவனப் பயிர்
10. பிரயோக மிருகவியல் நுண்ணுயிரியலும் நீர்ப்பீடனவியலும்
11. பிரயோக மருத்துவம், நோயியல் மற்றும் ஒட்டுண்ணியியல்

இதற்குரிய விபரமான பாடத்திட்டம் பேராதனை கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களப் பணிப்பாளர் நாயகத்திடமும் மாகாண கால்நடை உற்பத்தி சுகாதார பணிப்பாளர்களிடமும் பெற்றுக்கொள்ளலாம்.

11-175

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.